
# அறிவுச்சுரங்கம்

## தேசிய வாசிப்புமாத சிறப்பிதழ்
## National Reading Month Journal
## 2019

## இதழ் 02




**'வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்'**

பொதுநூலகம் மாநகரசபை - மட்டக்களப்பு
**Public Library Municipal Council - Batticaloa**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவுச் சுரங்கம்

## இதழ் - 2

### தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் - 2019

இதழாசிரியர்

திரு.தி.சரவணபவான்

**வெளியீடு**

**பொது நூலகம்**
**மாநகர சபை**
**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# சஞ்சிகை விபரம்


| | |
|---|---|
| சஞ்சிகையின் பெயர் | அறிவுச் சுரங்கம் |
| இதழ் | இரண்டாவது |
| இதழாசிரியர் | திரு.தி.சரவணபவான் (நூலகர் பொது நூலகம்) |
| இணை இதழாசிரியர்கள் | திரு.ம.லக்ஸ்மன் |
| | திருமதி.ஆர்.மந்தாஹினி |
| | திருமதி. வி.விஜயநாதன் |
| வெளியீடு | பொது நூலகம், மாநகரசபை, மட்டக்களப்பு. |
| பதிப்புரிமை | வெளியீட்டாளருக்கே |
| ஆண்டு | 2019 |
| பக்கங்கள் | x,49 |


ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மாநகர முதல்வரின் ஆசிச் செய்தி

## மாநகர முதல்வரின் ஆசிச் செய்தி !

நாடளாவிய ரீதியில் அரசினால் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்ற தேசிய வாசிப்பு மாத பிரகடனத்திற்கு அமைவாக மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் செயற்படுகின்ற மட்டக்களப்பு பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வாசிப்பு மாத நிகழ்ச்சி நிரலுக்கமைய **"அறிவுச் சுரங்கம்- இதழ்2"** சஞ்சிகை வெளியீடு செய்யப்படுவதையிட்டு மிகவும் மகிழ்வுறுகின்றேன்.

வாசகர்களின் தற்கால ரசனைக்கு ஏற்றதான பல்வேறு விடயங்களைச் தன்னகத்தே கொண்டதாக இவ்வருடம் இதழ்-2 ஆக வெளிவருகின்ற சஞ்சிகையானது வாசகர்களின் அவாவினை பூர்த்தி செய்கின்ற ஓர் சஞ்சிகையாக அமையும் என நினைக்கின்றேன்.

எனவே இவ் **"அறிவுச் சுரங்கம் - இதழ் 2"** இதனை வெளியிட அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நூலகர் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய நூலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன் இச் சஞ்சிகையானது சிறப்புடன் வெளிவர ஆசி வழங்குகின்றேன்.

தியாகராஜா சரவணபவன்
மாநகர முதல்வர்,
மாநகர சபை,
மட்டக்களப்பு.

தி.சரவணபவன்
முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மாநகர பிரதி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் 'வாசிப்பு மாதம் 2019' ற்காக வெளியிடப்படும் அறிவுச்சுரங்கம் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

மனித வாழ்வில் பல செயற்பாடுகளுள் முக்கியமான ஒன்றாக அமைவது வாசிப்பு என்கின்ற விடயமாகும். மனிதனது சிந்தனை நல்ல முறையில் அமைய வேண்டுமானால் அவன் வாசிப்பு பழக்கத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும். அவ்வாறு உள்வாங்கப்படும் போதுதான் நாம் நல்ல சமூகத்தை வளர்த்தெடுக்க முடியும்.

மாணவர்கள் மத்தியில் வாசிப்பு திறனை வளர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் மட்டுமாநகர சபையானது வருடந்தோறும் செயற்படுத்தி வருகின்ற வாசிப்பு மாத நிகழ்வானது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயம். அதனை செயற்படுத்தி நடைமுறைப்படுத்தும் நூலகங்கள் இவ்வாறான சஞ்சிகைகள் வெளியிடுவது மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

வாசிப்பை சுவாசிப்பாக கொண்டவர்கள் அறிவால்யாசிக்கப்படுகின்றனர். அவர்கள் சமூதாயத்தில் போற்றப்படுபவர்களாகவும் சமூகத்தை நல்ல வழியில் சுபீட்சிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மொழி தகவல்களைப் பரிமாற்றும் ஊடகமாகவுள்ளதால் எழுத்து மொழி நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக்கூடிய வகையில் அப்பணியைப் புரிகின்றது. 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு' என்பதற்கமைய வாசகர்களுக்கு அறிவுச் சுரங்கத்தில் அகழப்படுகின்ற ஆக்கங்கள் அறிவின் ஆழத்தை வெளிக்காட்டும். இம்முயற்சி இடைவிடாது தொடரட்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் அறிவுச்சுரங்கத்திற்கும் அதனுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களினையும் பாராட்டுக்களினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.சத்தியசீலன்**
**பிரதி முதல்வர்**
**மாநகர சபை,**
**மட்டக்களப்பு**

Hon. K. SATHIYASEELAN (J.P.U.M)
Deputy Mayor
Municipal Council
Batticaloa.
07/11/2019.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தில் மட்டக்களப்பு நூலக சேவையினை எண்ணிப்பார்க்கையில் கிழக்கு மாகாணத்தில் முதற்தரமான பொது நூலகம் மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் இயங்குகின்றது என்பது பெருமையாக உள்ளது. இந்நூலகத்தின் வளர்ச்சி படிப்படியாக முன்னேறி வந்து தற்போது நவீன வசதிகளுடன் கூடிய கணனி மயப்படுத்தப்பட்டதும் தன்னியக்கமானதுமான வசதிகளைக் கொண்டதாக இயங்கி வருகின்றது.

இதன் வரலாறு மிகப் பழைமையானதும், மட்டக்களப்பு பாரம்பரியங்களையும், கலை கலாசார விழுமியங்களையும் நீண்ட காலமாக முன்னெடுத்து வந்து இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்துடன் இணைந்துள்ளது. என்பதனை வெளிப்படையாக கூறலாம்.

மட்டக்களப்பு பொது நூலகத்தின் பயனை அனுபவித்து மேல் நிலை அடைந்தவர்கள் பலர். அவர்கள் இன்னும் இந்நூலகத்தின் பெருமையையும், தனிச் சிறப்பினையும் பேசுவார்கள்.

இன்று இளையோர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது என குறைகூறப்படுகின்றது. அதனால் தான் இந்த வாசிப்பு மாதம் அவர்களை வாசிப்பின்பால் ஈர்க்க முற்படுகின்றது.

வாசிப்பு மாதம் 2019இன் ஒரு செயற்பாடாக மட்டக்களப்பு பொதுநூலகம் **அறிவுச்சுரங்கம்** சஞ்சிகை வெளியிடுவது பாராட்டுக்குரியது. இந்தப் பணியில் ஆக்கங்களைத் தந்து மற்றும் முன்னின்று பணியாற்றிய அனைவரையும் பாராட்டுகின்றேன்.

உங்கள் பணி தொடரட்டும். வாசிப்பதனூடாக வாழ்வை வளப்படுத்துவோம்.

சட்டத்தரணி **கா.சித்திரவேல் SLAS**
மாநகர ஆணையாளர்
மாநகர சபை
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மாநகர பிரதி ஆணையாளரின்
## வாழ்த்துச் செய்தி

"வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்." என்னும் தொனிப்பொருளில் 2019ம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதமானது கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்நிலையில் மட்டக்களப்பு பொது நூலகத்தினரால் "அறிவுச்சுரங்கம்" என்னும் தலைப்பில் கட்டுரைகள், கவிதைகள், வாசிப்பு சார்ந்த கதைகள் எனப் பல்வேறு ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

ஏனைய விலங்குகளில் இருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டும் பண்புகளில் பிரதான ஒன்றாக பகுத்தறிவு காணப்படுகின்றது. இத்தகைய பகுத்தறிவின் பூரண வளர்ச்சிக்கு வாசிப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதனாலேயே வள்ளுவர்: "கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதார்" என வலியுறுத்திச் சென்றுள்ளார்.


இவ்வாறான வாசிப்பினை ஊக்குவிப்பதில் நூலகங்கள் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனினும் அண்மைக் காலங்களில் வாசகர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கொண்டே செல்கின்றது. இதனை தவிர்க்கும் நோக்கில் இவ்வருட தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப் பொருளாக "வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்." என்பது காணப்படுகின்றது. இதற்கு செயல் வடிவம் கொடுப்பது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அதன் அடிப்படையில் இவ்வருட தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை சிறப்பாக நடத்திக் கொண்டிருப்பதுடன் அதன் ஓர் அங்கமாக "அறிவுச் சுரங்கம்" என்னும் இச்சஞ்சிகையினை வெளியிடும் மட்டக்களப்பு பொதுநூலக நூலகர், நூலக உத்தியோகத்தர்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இவ்சஞ்சிகைக்கான ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து தங்களது முயற்சி தொடர்ந்தும் வெற்றிபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உ.சிவராசா
பிரதி ஆணையாளர்
மாநகர சபை
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## நூலகக்குழுத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

அறிவுச் சுரங்கமே.!

அறிவுக் கதிர் பரப்பி பிரகாசித்திடு! உன்னை வாழ்த்தியுரைக்கின்றேன்.

வாழும்வரை வாசிப்பவன் கையிருப்பு என்றுணர். வையகத்திற்கு வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தியவர் நம்மவரே.

கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு என்று அறைகூவல் விடுத்த ஔவையின் காலத்தையறிந்தால் மேற்குறிப்பிட்ட கருத்து புரிந்து போகும்.

அதன்பால் நம்நாடு விழிப்புற்றிருக்கிறது. வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்த ஐப்பசித் திங்கள் முழுவதும் வாசிப்பு மாதம் என்று பிரகடனம் செய்திருக்கிறது நமதரசு. இவ்வாண்டு வாசிப்பு மாதம் சிறுவர்களிடமிருந்தே வாசிப்பைத் தொடங்குவோம் என்ற தொனிப்பொருளில் தொடங்கியிருக்கிறது.

அருமையான தொனி பொருள். வாசிப்பு தொடங்க வேண்டிய இடம் அங்கிருந்துதான் ஆரம்பமாக வேண்டும். நம்நாடு என்னும் தோட்டத்திலே நாளை வளரும் பிள்ளைகள் நம்சின்னம் சிறுசுகளே! அங்கு ஊன்றப்படும் விதைதான் அகல விழதுகள் பரப்பி ஆழவேரூன்றி எதற்கும் அசையாது நின்று நிலைக்கும் ஆலமரம்போல் நம் எதிர்கால சந்ததி சிறப்புற்று விளங்கும்.

பரந்து பட்ட வாசிப்பு தகவல்களின் பெட்டகமாக மனங்களை நிரப்பும். உள்ளுணர்வு பெருக்கிடும். மேலும் சிந்தனைகள் உருவாகும். புதிய, புதிய எண்ணங்களைத் தேடிட வழிவகுக்கும். இப்படித்தான் வாசிப்புக்கு அறிஞர்கள் வரைவிலக்கணம் சொல்லிருக்கின்றார்கள்.

வாசிப்பை நேசித்து இன்றும் வாழும் பெருந்தகைகளை இந்நேரம் மனங்கொள்ளல் சாலப் பொருத்தம்

விஷமுண்டு மரணத்தைத் தழுவும்வரை புத்தகமும் கையுமாக வாழ்ந்தான் சோக்கிரட்டிஸ்.

தூக்குக் கயிறை முத்தமிடும் வரை வாசிப்பை நேசித்தான் சுபாஸ் சந்திரபோஸ்

சத்திரசிகிச்சையின் போது மயக்கமருந்து வேண்டாம் புத்தகமொன்றைக் கொடுங்கள் என்றார் பேரறிஞர் அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போர் புரியும் வேளையிலும் புத்தகம் படிக்க நேரம் ஒதுக்கினான் மா வீரன் அலக்ஸ்ஸான்டர்.

போரில் கைப்பற்றப்பட்ட தங்கப் பேளையில் புத்தகங்களை வையுங்கள் என்றும் அதே அலக்ஸ்ஸான்டர் உத்தரவிட்டு பனுவல்களின் பெருமையைப் பறைசாற்றினான் அதே மன்னன் அலக்ஸ்ஸாண்டர்.

வாசிப்பு அவர்களுக்கெல்லாம் சுவாசிப்பாகவே விளங்கியது. வாசகனும், நூலும் மௌனமாகவே பேசிக்கொள்கிறார்கள். வாசிப்பு நிறைவு பெறுகிறது. மௌனம் கலைகிறது.

நூல் வழங்கிய செய்தியால் வாசகன் நிமிர்கின்றான். திருவில்லாக் கற்கை இடம் பெறும் கல்லூரி நூலகம் அமைந்திருக்கும் அருமையான நூலகத்தை நாம் பயன்படுத்தத் தவறக்கூடாது.

எனவே வாசிப்பு மாதம் முழுவதையும் பயன்தக்கவாறு பயன்படுத்தும் விழிப்புணர்வை நமக்குத் தந்திடும் மாதமாக இம்மாதம் அமைந்திட வேண்டும். வாசிப்பின் அவசியத்தை எடுத்தியம்பிடும் வகையில் பல்வேறு விதமான நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

அதில் ஒரு அம்சமாக அதன் நினைவாக நூல்கள் சஞ்சிகைகளை வெளியிடுகின்றனர். அப்படித்தான் பொது நூலகம் "அறிவுச் சுரங்கம்" எனும் மகுடத்தில் சஞ்சிகை வெளியிடுகிறது. புதிய தகவல்களைக் கொண்டு அறிவுப் பூங்கா சிறகடித்து உயரப்பறந்திட மட்டக்களப்பு மாநகர மன்றத்தின் நூலக மற்றும் மக்கள் மேம்பாட்டுக் குழு தலைவன் என்ற வகையில் வாழ்த்துகிறேன்.

வாழ்க நூலகம் ! வளர்க வாசிப்பு .

நன்றி

வே.தவராஜா
தலைவர்
நூலக, மற்றும் மக்கள் மேம்பாட்டுக் குழு
மாநகர சபை
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இதழாசிரியரின் செய்தி

மட்டக்களப்பு மாநகரசபையின் பொது நூலகம் தமிழரின் தனித்துவத்தைப் பேணவும், அறிவுபூர்வமான சமூதாயத்தை உருவாக்கும் நோக்கில் பல சேவைகளை வழங்கி வருகின்றது. அந்தவகையில் காலத்துக்கு பொருத்தமான நூல்களின் பயன்பாட்டை மேன்படுத்தவும், மக்களிடையே வாசிப்பை ஊக்கப்படுத்தும் நோக்கில் பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் 2004 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டுவரும் தேசிய வாசிப்பு மாதம் இவ் ஆண்டு ‘வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடம் இருந்து ஆரம்பிப்போம்’ எனும் தொனிப்பொருளில் இடம்பெறுகின்றது. அந்த வகையில் மட்டக்களப்பு பொதுநூலகத்தால் பல நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அதனுடன் **“அறிவுச் சுரங்கம்”** என்னும் சஞ்சிகை இரண்டாவது தடவையாக வெளியிடப்படுகின்றது.

இச் சஞ்சிகைக்காக எழுத்தில் ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து கட்டுரை,கவிதை,சிறுகதைகள் தொடர்பான ஆக்கங்கள் பெறப்பட்டு இதில் பிரசுரிக்கப்படுகின்றது. இதற்கு ஆக்கங்களை வழங்கிய அனைவருக்கும், இம் மலருக்காக எமக்கு ஆலோசனை வழங்கியவர்களுக்கும், எமது நூலக உதவியாளர்களுக்கும், இம் மலருக்கு ஆசிச்செய்தி வழங்கிய கௌரவ மாநகர முதல்வருக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கிய கௌரவ மாநகர பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தி.சரவணபவான்
நூலகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்


| விடயம் | பக்க எண் |
|---|---|
| ஓதுவது ஒழியேல் | 1 |
| விதைப்பந்து | 3 |
| சமாதான தினத்தை முன்னிட்டு சமாதானத்திற்கு ஓர் வழி | 5 |
| அறிவின் அன்னை | 7 |
| ஆற்றங்கரை அப்பா | 10 |
| உபநிடத உரையாடலில் கருத்து முதல்வாதத்தின் வகிபங்கு | 16 |
| மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் | 29 |
| புலமை நலம் பெறுவோம் | 32 |
| சுவாசத்தின் வாசிப்பு | 33 |
| காலன் விடுதூது | 34 |
| மாணவர்களும் வாசிகசாலையும் | 35 |
| வாசித்ததில் நேசித்தது | 36 |
| நாம் எங்கே போகின்றோம் | 37 |
| மட்டக்களப்பின் மகிடி நாடகம் - ஓர் அறிமுகம் | 38 |
| நட்பின் சிகரம் | 42 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஓதுவது ஒழியேல்

## ஆ.மு.சி.வேலழகன்

இந்த உலகமானது சகல வழிகளிலும் நூறு சதவிகிதம் இல்லாவிட்டாலும் ஓரளவிலேனும் குறைவின்றி நிறைவுடன் திகழ்ந்தால் மட்டுமே, மானிடன் முதல் ஏனைய ஜீவராசிகளும், நிம்மதியாக அதனதன் நிலையிலே வாழ முடியும்.

இதற்கு இயற்கையின் சுழற்சியோடு, மனிதசத்தியும்,மனிதனது அறிவுமானது முக்கூட்டுமே மிகமிக அவசியம்.மானிடனது ஆயிரம்தான் சத்தியும் உழைப்பு மிருந்தாலும் அதனை அறிவு கொண்டே முறையாகப் பயன்படுத்தவேண்டும் .இல்லையேல் விழலுக்கு இறைத்த நீராகவே ஆகிவிடும் இதனால் இந்த உலகுய்ய எமது "இளஞ் சிறார்கள்" அறிவுள்ள பிரஜைகளாக ஆக்கும் பெரும் பணியை ஒவ்வொரு பெற்றோரும், கல்வி கற்பிக்கும் ஆசான்களும், அறநெறி சார்ந்த பொது அமைப்புக்களும் பெரும் முயற்சி எடுக்க வேண்டும்.

"பெறுமவற்றுள் யாமறியாது இல்லை அறிவறிந்த
மக்கட்பேற அல்ல பிற"
(திருக்குறள் - 61 )

என்ற திருக்குறள் நெறிக்கொப்ப நாம் அறிந்தவரை அறிவை அறிந்து,மதிக்கும் பிள்ளைகளைப் பெற்றிருப்பதே பெரும்பேறு! இதன் பின்புதான் ஏனைய செல்வங்கள் அனைத்துமே.இப்பிள்ளைகளும் பிறக்கும் போது அறிவுள்ள பிள்ளைகளாகப் பிறப்பதில்லை. அதனால் அவர்கட்கு அறிவூட்டும் பெரும் பொறுப்பும்,கடமையும் மேற்குறிப்பிட்டதுபோல் பெற்றோரையும், கற்பிக்கும் ஆசான்களையும், அறநெறி பொது அமைப்புக்களையுமே சாரும்.

பிள்ளைகளை பொருளீட்டும் நோக்கோடு இயந்திரமாக ஆக்கும் கல்வியை மட்டும் போதிப்பதினால் மானிடமும்,சமூக,உலகமும் பண்படப்போவதில்லை. பொருளும் அவசியம்தான். ஆனால் பொருளோடு அறிவும் மிக அவசியம்.

இளம் சிறார்களுக்குத் தாங்கள் பிறந்த மண்ணிலிருந்து அவர்களை வேரோடு பிடுங்கி எறியும் கல்வியைத்தான் நாம் கற்பிக்கின்றோம்.எந்த கல்வி நல்ல ஒழுக்கத்தையும், மனவலிமையையும், விரிந்த அறிவையையும் தருமோ அத்தகைய கல்விதான் சிரார்களுக்குத் தேவை.ஆனால் நாம் சிறார்களின் அறிவுக்குத் தடையாக சுற்றிவர மதில் சுவர்களை எழுப்பிக்கொண்டு இருக்கின்றோம்.அவர்கள் சுயமான அறிவைப்பெற்று ஆந்நியமான உலகிலிருந்து பல வளர்ச்சிக்கான சாதனங்களைக் கொண்டுவரும் நிலைக்கு அவர்கள் உருவாக வேண்டும்.இதைத்தான் பாரதியும் :

" உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓலது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே" என்றான்.

இளம் சிறார்களை பள்ளிக்கூட கல்வியோடு மட்டும் நிற்கும் நிலைக்கில்லாமல் அவர்களை பல நூல்களை தேடித்தேடி வாசிக்கும் நிலைக்கு ஊக்கப்படுத்த வேண்டும்.ஒரு நூலைப் படிப்பது ஒரு புதிய நண்பனை பெறுவது போன்ற இனிய அனுபவமாம் என்பர் அறிஞர். "நல்ல நூல்கள் நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும் ,நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்" என்றார் அமரர்,அறிஞர் அப்துள்கலாம் அவர்கள்.

"துளசிதாசரின் இராமாயணமும்" , "வியாசரின் பகவத்கீதையும்" , "அரிச்சந்திர புராணமும்"அண்ணல் காந்தி அவர்களை கத்தியம் தவராத உத்தமராக்கியது. டால்ஸ்டாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"இறைவனின் அரசாங்கம் உனக்குள் இருக்கிறது எனும் நூல் மகாத்மாவின் மனதை மலரச் செய்தது. உலக வரலாற்றில் சில நூல்கள் சரித்திர நதியின் போக்கையே மாற்றிச் சாதனை படைத்தனவாம். இன்னும் சில நூல்கள் மனிதகுலத்தை நல்வழிப் படுத்தினவாம். ஆதலால் மனிதர்களில் யாராய் இருந்தாலும் வாசிக்க வேண்டும். அதிலும் இளம்பிள்ளைகள் வாசிக்கத் தூண்ட வேண்டும். வாசியுமென்று சொன்னால் மட்டும் எந்தப்பிள்ளையும் வாசிக்காது! எனவே அப்பிள்ளைகளின் மனநிலைக்கேற்ப சிறு சிறு கதைகளை, அதுவும் சித்திரங்களாக உருவகப்படுத்திய நூல்களை வாங்கிக் கொடுத்தும், பாட்டிமார் சொல்லும் வகையிலே பல கதைகளைச் சொல்லியும் இன்னும் சில வழிகளைக் கண்டுபிடித்தும் உளவியல் அடிப்படையில் வாசிக்க தூண்ட வேண்டும்.

"கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்பதற்கிணங்க நோபல் பரிசு பெற்ற பேரறிஞர் பெர்னாட்ஷாவும் , வின்சன் சர்ச்சிலும் பள்ளிக் கல்வியால் உயர்ந்தவர்கள் இல்லை.
உலகம் இதுவரை சந்தித்த சிறந்த அறிஞர்கள் பல்லாயிரம் பேராவார். கிறேக்க தத்துவ ஞானி சோக்கிரட்டீஸ் கஃபூசியஸ் (சீனம்) பெஞ்சமின் பிராங்கிளின், பேரறிஞரான ராகுல சங்கிருத்தியான் தமிழிலக்கியத்திற்கு உலகத்தரத்தை ஈட்டித்தந்த எழுத்தாளர் ஜெயக்காந்தன், எழுத்திலும் பேச்சிலும், சினிமாகதை வசனத்திலும், கவிதையிலும் ஆட்சி நிருவாகத்திலும் சாதனை படைத்த கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாஸன் என அடுக்கிக்கொண்டே போகலாம். மேலே குறிப்பிட்டவர்கள் எல்லோரும் கல்லூரியிலும், பல்கலைக் கழகங்களிலும் படித்து பட்டங்கள் பெற்று வெளிவந்தவர்களில்லை. மாறாக கண்டது கற்றே பண்டிதரானவர்கள். வாசிப்பின் மூலமே வையகம் கண்ட அறிஞர்கள் ஆனவர்கள்.

பள்ளியிலும், கல்லூரியிலும் பெறும் கல்வியை விட வாசிப்பின் மூலமும், வாழ்க்கை தரும் அனுபவக்கல்வியுமே ஆயிரம் மடங்கு உயர்வானது. இன்றைய கலாசாலைக் கல்விமுறை ஒழுக்கத்தையும், சமூகம் நிற்க நிலைக்கக்கூடிய பண்பாட்டையும் வளர்க்கவில்லை. சமூக உணர்வைத் தூண்டவில்லை. சுயநலம் துறந்த பொதுநலனை ஊட்டவில்லை. வெறும் ஏட்டுப்படிப்பு மட்டுமே! ஆகவே வாசிப்பு ஒன்றே எமது கண்ணைத் திறக்கும் உலகைப் புரியவைக்கும் என்பது பொய்யில்லை உண்மை. இதற்கு எடுத்துக்காட்டாக நூற்றுக் கணக்கானவர்களைக் குறிப்பிடலாம். நல்ல ஒழுக்கம் நெறிசார்ந்த நல்ல பண்புகளை மனித மதங்களில் விதைப்பதுதான் நீண்ட காலமாக கல்வியின் நோக்கமாக இருந்து வந்துள்ளனவாம். எமர்சன், ரஸ்கின், மாஜின், விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றவர்கள் கல்வியின் உயிரத்தலம் ஒழுக்கம் என்றே கருதினராம்.

பள்ளியிலும், கல்லூரியிலும் பெறுவதுதான் கல்வி என்ற மாயத்திரை கிழிபட வேண்டும்!என்கல்வியறிவில் பள்ளிக்கூடம் மூக்கை நீட்ட நான் அனுமதித்ததில்லை என்றார் "மார்க்ட்வைன்" கலாசாலைகள் கூழாங்கற்களுக்கு மெருகேற்றி வைரங்களை ஒளி மங்கச் செய்கின்றன என்றார் அறிவைப் போற்றிய "இங்கர்சால்" அவர்கள். ஆகவே இன்றைய கல்வியோ, அன்றைய கல்வியோ எது எப்படியிருந்தாலும் பள்ளிக் கூடக் கல்வியோடு மட்டும் கற்றுவிட்டோம் என்ற எண்ணமும், இறுமாப்புமில்லாமல் பொதுவாக நாம் இறக்கும் வரை வாசிக்க வேண்டும்.

"உலகம் தழீஇய தொட்பம் மலர்ந்தலும் கூம்பலும் இல்லை தறிவு" (திருக்குறள் - 425)

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விதைப் பந்து

திருமதி. சுந்தரமதி வேதநாயகம்

அணில் ஒன்று கீச்சு.....கீச்சு.... என்று ஆனந்தமாகக் கத்திக் கொண்டு கொய்யா மரத்தில் ஏறியது. மரத்தைச் சுற்றிப் பார்த்தது, என்னாலும் முடியும். சத்தமிட்டுக் கூறி கைகளைத் தட்டி மகிழ்ந்தது. ஒவ்வொரு கிளையாகத் தாவித்தாவி கொய்யாப்பழங்களின் வாசனையையும், அழகையும் ரசித்தது. ஒரு பழத்தை ருசித்து கொறித்து உண்டது.

அப்போது பசியால் வாடிய பச்சைக்கிளி அந்தப் பக்கமாகப் பறந்து வந்தது. கொய்யாப்பழ மணம் மூக்கைத் துளைத்தது. தேடி மரத்தைக் கண்டு பிடித்து ஒரு பழத்தைக் கொத்தி உண்ணத் தொடங்கியது. எட்டிப் பார்த்த அணில், கிளி கீக்....கீக் என்றே சந்தோஷமாகக் கத்தியவாறு பசியுடன் பழத்தை உண்பதைக் கண்டது. மன நிறைவுடன் பார்த்துக் கொண்டிருந்தது. வயிறு நிறைந்த பின் அ..ப்..பா..டா. என்றவாறு தலையை நிமிர்த்திப் பார்த்தது கிளி.



அணில் யாரது? என் அனுமதி இல்லாமல் என் பழத்தை உண்பது என அதட்டிக் கேட்டது. எ.ன்..ன..? உன் பழங்களா? இந்த மரத்தை நீயா நட்டாய்? கேலியாகக் கேட்டது கிளி. அணில் ஆமாம். நானே நட்டேன் கம்பீரமான குரலில் கூறியது. கிளி அப்படியா? எப்படி நட்டாய்? ஆச்சரியத்துடன் கேட்டது. அணிலோ அதையா கேட்கிறாய்? அது பெரிய கதை. ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தது. எனக்கும் அந்தக் கதையை தயவு செய்து சொல்லேன் நண்பா! கிளி கெஞ்சியது. சொல்லத்தான் போறன் அவதிப்படாமல் கேள், என்றது.

ஒரு நாள் வயல் பக்கமாக தாவித்தாவி வந்து கொண்டிருந்தேன். ம்...ம் பிறகு... .சில மாணவர்கள் அங்கே பல இடங்களிலும் ஏதோ உருண்டைகளை பெட்டி ஒன்றிலிருந்து எடுத்து வீசுவதைக் கண்டேன். இன்னும் பல இடங்களிலும் போட்டு விட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்ற பின் மெதுவாகப் போய் ஒரு உருண்டையை எடுத்துக் கொறித்துப் பார்த்தேன். களிமண்ணால் செய்த அதற்குள் சில கொய்யா விதைகள் இருந்தன. அதில் ஒரு உருண்டையை கொண்டு வந்து இங்கே போட்டேன். சிறிது நாட்களின் பின் மழை நன்றாகப் பெய்தது. அதிலிருந்து கொய்யா மரம் வளர்ந்தது. பூத்தது, காய்த்தது, பழுத்தது. நாமும் இன்று உண்டு மகிழ்ந்தோம். அப்படியா? வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருந்த கிளியிடம் சரி சரி... வா நாம் போய் பசியுடன் இருக்கும் நம் உறவுகளை அழைத்து வந்து பழங்களை உண்ணச் செய்வோம், என்றது. அணில்களும், கிளிகளும் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தன. உண்டு மகிழ்ந்தன. கொய்யா மரத்தின் கதையை கிளி கூற அணில்களும், மற்றைய கிளிகளும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




நன்றே செய் அதை இன்றே செய் எனக்கூறியது ஒரு வயது போன கிளி. அதன் கருத்தை அணில்களும் கிளிகளும் ஏற்றுக் கொண்டன. அன்றிலிருந்து தாம் உண்ணும் பழங்களின் விதைகளைச் சேகரிக்கத் தொடங்கின. குளக்கரையோரம் உள்ள களிமண்களை நீருடன் சேர்த்து உருண்டை செய்து அதனுள் விதைகளை வைத்து எடுத்தன. முக்கியமாக காடுகள் அழிக்கப்பட்ட இடங்களில் வேம்பு, பாலை, வீர, விளா போன்ற விதைகளையும் மனிதர்கள் வாழும் இடங்களில் கொய்யா, மாதுளை, பப்பாசி மற்றும் நிழல் மர விதைகளையும் எல்லா இடங்களிலும் போட்டன. சில காலத்தின் பின் பழச்சோலையில் பழுத்த பழங்களை மக்கள் உண்பதையும், வெயில் நேரத்தில் நிழலில் மக்கள் ஒதுங்கி இளைப்பாறிச் செல்வதையும் கண்டு அனைத்தும் மகிழ்ந்தன.

என்னால் முடியும் நண்பா
உன்னால் முடியும் நண்பா
எம்மால் முடியும் நண்பா



அணில்களும், கிளிகளும் மகிழ்வுடன் ஆடிப்பாடின






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமாதான தினத்தை முன்னிட்டு சமாதானத்திற்கு ஓர் வழி

**திரு.வாமநாதன்**

சமாதானம் சமாதானம் என்றுரைத்தால்
வந்திடுமா சமாதானம்
சமாதானம் நல்லுறவு என கேட்டு வாங்க
கடைத்தெருபண்டமா நல்லுறவு
அறிவுசார் பெரியோரே கேளுங்கள்!
ஆக்கமுள்ள இளையோரே சிந்தியுங்கள்

சமாதானம் நமக்குள்ளே நல்லுறவும் நமக்குள்ளே
தொலைந்த இடம் விட்டு தூர இடம் தேடுவதா?
அறிவை குருடாக்கி உள்ளத்தை இருளாக்கி
ஒளியை வெளியில் தேடினால் கிடைக்குமா?

உதட்டில் எதிரும் வார்த்தைகள் தடித்தால்
உறவில் கூட பிரிவு வரும்
வாழ்வின் அர்த்தம் திசைமாற
தென்றலும் புயலாய் மாறிவிடும்

நெஞ்சில் புகை என பகை வளர்ந்தால்
இனமும் மதமும் மோதலாய்மாறும்
ஆட்சி அதிகாரம் அகங்காரம் கொண்டால்
கலகத்தில் துவங்கி அவலத்தில் முடியும்

பட்டறிவு பாடத்தை மறந்துவிட்டு
தூரநோக்கினை உணராது
துருவங்கள் இரண்டாய் செயற்பட்டால்
சமத்துவம் கிடைத்திடுமா சமாதானம் வந்திடுமா?

சோகம் சுமக்கும் சுமைதாங்கிகள்
தொலைந்த உறவினைத் தேடும் அவலம்
விதி கொண்ட கோலமென மனித ஓலம் விதித்தது விதியா மனிதரின் சதியா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இனவாதம் மதவாதம் நோய் காவிக்கிருமி
குறுகிய மனங்களை காவு கொள்ளும்
அழிவின் ருசியில் பசியாறும்
பசியில் சமாதானம் இரையாகும்

எத்தனை மதங்கள் எத்தனை போதனைகள்
அறிந்திருந்தும் அறிவிலியாய் மனிதர்கள்
அறியா உயிரினங்கள் போதிக்கும் ஆசானாக
இயற்கையின் விந்தையை பாருங்கள்

சமூக போர்க்களத்தில் போராளிகள் நாம்
அன்பே ஆயுதம் அகிம்சையே நம் வியூகம்
மனித மனங்களை வெற்றிகொள்ள
ஒன்றினைவோம் வாருங்கள்

மனித மாண்பின் படை எடுத்து
இதயத்தில் இரக்கம் ஊற்றெடுக்க
மனிதர்கள் யாவரும் ஓரினம் என்று
ஒற்றுமையை வளர்த்திடுவோம் ஒன்று பட்டு வாழ்ந்திடுவோம்

பக்குவம் தந்திடுவொம் பக்திவழி
பிறரையும் தன்போல் நேசிக்கும்
தூய அன்பே இறைவன் நெறி
உலக அமைதிக்கு அதுவே வழி

வாழ்வின் முடிவுரையை எழுதுமுன்னே
மண்ணோடு மண்ணாகி மாயமாகும்
உடல் எடுத்து வந்த மனிதன்
அறியாமல் பிறந்தாலும்
வாழ்வை புரியாமல் இருக்கலாமா?
தேடலின் விடையை அறியாமல் போகலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவின் அன்னை

இளங்கோவன் மதனன்

எமது வாழ்கைப் பயணத்தில் பலரை சந்திப்போம். ஆனால் சிலரின் சந்திப்புதான் சந்திக்க வைக்கும் இந்த கதையும் அவ்வாறே.

அறிவின் அன்னை என்னும் தலைப்பானது உங்களுக்கு வியப்பினை ஏற்படுத்தலாம். இந்த கதையின் இறுதியில் இதன் அர்த்தத்தை நீங்களும் புரிந்து கொள்வீர்கள்.

இது ஒரு உண்மைக்கதை.எனது நண்பனின் கதை. சூரியன் மறையும் போது சுட்டெரிக்கும் வெயிலாய் அமைந்த கதை. அவனை சிறு வயது தொடக்கம் அதாவது எட்டு வயது தொடக்கம் எனக்குத் தெரியும். ஒரு மனிதனின் வாழ்வில் நூலகம் என்பது என்ன செய்துவிடும் என்று கேள்வி கேட்பவர்களுக்கான விடையினை தரும் கதை.

இனி கதைக்குள் நாம் செல்வோம்.எனது நண்பனின் பெயர் கணேஷ்.எனக்கும் எனது நண்பனுக்கும் சிறுவயது தொடக்கம் நற்புடன் பழக்கம் உள்ளது.எனது நண்பனின் ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை இருவரின் நட்பும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.ஆகையால்தான் நான் அவனைப்பற்றிய இந்த கதையை உங்களுக்கு தெளிவாக கூறுகின்றேன்.

எனது நண்பன் கணேஷ் மிகவும் அமைதியானவன். கணேஷ் வாழ்கையின் சிறு வயதில் மிகவும் கஷ்டமானதாகவே இருந்தது. கஷ்டம் என்றால் பணம் மட்டுமல்ல சரியான முறையில் கல்வி அறிவு இல்லை ஓடிவிளையாடுவதற்கு சரியான நண்பர்கள் இல்லை சில வேளைகளில் அவனின் உறவினர்கள் கூட அவனைத்தாழ்த்தி கதைப்பார்களே தவிர அவனை சந்தோஷப் படுத்தியதே இல்லை. ஆதரவு கொடுத்ததே இல்லை. கணேஷ் தாய் தந்தையருக்கு இரண்டாவது பிள்ளை. அவனின் தாய் தந்தையருக்கு சிறுவயது முதல் கஷ்டம்தான். தந்தை விவசாயி. தாய் வீட்டு வேலைகளை கவனிப்பார். கணேஷ்சுடன் உடன் பிறந்த சகோதரர்கள் ஐந்து பேர். கணேஷ் பாடசாலையில் கூட ஒதுக்கி வைக்கப்பட்டவனாகவே இருந்தான். பாடசாலையில் ஆசிரியர்களுக்கு ஒரு விடயம் உள்ளது. படிக்கும் மாணவர்களை ஒரு திராசிலும் படிக்காத மாணவர்களை மற்றைய திராசிலும் வைக்கும் பழக்கம். பொதுவாக ஆசிரியர் மனதில் படிக்கும் மாணவர்களிடம் காட்டும் அக்கறையும் பழகும் முறையும் மற்ற மாணவர்களிடம் குறைவானதாகவே இருக்கும். இது எல்லா ஆசிரியர்களிடமும் இல்லை. கணேஷ் படித்த கல்லூரியில் ஒரு சில ஆசிரியர்களை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

கணேஷின் பரீட்சை முடிவுகள் எல்லா பாடங்களிலும் இருபது புள்ளிக்கு குறைவானதாகவே இருக்கும். ஒரேவகுப்பில் படிக்கும் சக மாணவர்கள் கூட அவனிடம் கதைப்பதோ பழகுவதோ இல்லை. ஏன் என்றால் அவன் முட்டாள். அவனுடன் கதைத்தால் நமக்கும் மரியாதையில்லை என்பதே அவர்களின் எண்ணம். இவ்வாறே அவனின் வாழ்கை சென்றுகொண்டிருக்கும் போது கணேஷ் எட்டாம் வகுப்பு வரை வந்துவிட்டான். அப்போது என்னிடம் வந்து நண்பா என்னை எல்லோரும் ஒதுக்கிவைக்கின்றார்களே ஏன் நான் பாவம் இல்லையா? என்னை ஒருவருக்கும் பிடிக்கக் கூட இல்லையே....ஏன் என்று கேட்டான். இந்த கேள்விக்கு நான் உன்னை ஒருவரும் ஒதுக்கவில்லை. நீதான் அப்படி நினைக்கிறாய் என்று சொல்லிவிட்டு விளையாட போனேன். நான் அந்த கேள்வியை பெரிதுபடுத்தவில்லை. அன்று அவனின் மனநிலையினை நான் புரியவில்லை. சில சமயங்களின் நானும் அவனுடன் பழகுவதற்கு விரும்புவதில்லை. கணேஷை நான் எங்கு கண்டாலும் தனிமையில் இருந்து ஏதோ சிந்தித்து கொண்டுதான் இருப்பான். அன்று எனக்கு தெரியவில்லை அவனின் மனதிலுள்ள கவலையால்தான் அவன் அவ்வாறு உள்ளான் என்று.

இவ்வாறே சிறிது நாட்கள் சென்றது. கணேஷின் நிலையும் அவ்வாறேயிருந்தது. கணேஷிற்கு இறைபக்தி அதிகம். அவனின் கூடுதலான நேரம் கோயிலில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருப்பான். யாரிடமும் பெரிதாக கதைக்கமாட்டான். பல திறமைகள் இருந்தாலும் அவனை தட்டிக்கொடுக்க நானும் கூட தவறிவிட்டேன். கணேஷ் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது ஒரு நாள் பாடசாலை அதிபர் வந்து கணேஷிடம் கல்வி தகுதி மிக குறைவாக உள்ளது.அவனை இந்த முறை எடுக்கும் பரீட்சை முடிவுகளை பார்த்து அவனை இந்த வகுப்பிலேயே வைத்து தரம் இரக்கம் செய்வோம் என்று சொன்னார். கணேஷ் அன்று எல்லாமாணவர்கள் முன் அதிபர் கூறியதற்கு கண்கலங்கி நின்றான். மற்றைய மாணவர்கள் கணேஷை பார்த்து கேலி செய்து சிரித்தனர்.அன்று வகுப்பு ஆசிரியர் வந்து எங்க உயிரை வாங்கிறாயோ... என்று கூறிக்கொண்டு சென்றார். அன்று தலை குனிந்தபடி அழுதுகொண்டு நின்றான்.

மறுநாள் கணேஷ் பாடசாலைக்கு வந்து சக மாணவர்களிடம் ஏன் என்னிடம் ஒருவரும் பேசுகிறீர்கள் இல்லை. இந்தமுறை பரீட்சையில் நான் குறைவாக மதிப்பெண் எடுத்தால் இதே வகுப்பில் என்னை வைத்துவிடுவார்கள். எனக்கு ஆசிரியர்களிடம் கேட்க பயமாக உள்ளது. நீங்கள் எனக்கு பாடம் சொல்லித்தர முடியுமா? என்று கேட்டான். அதற்கு வகுப்பிலுள்ள எல்லோரும் நானும் உட்பட சிரித்தோம். ஆனால் அவனுக்கு ஒருவரும் உதவவில்லை. மாலை நேரத்தில் நானும் சில நண்பர்களும் நூலகத்திற்குச் சென்று கதைப்புத்தகம் வாசிப்பது வழக்கம். ஆனால் அன்று நாங்கள் செல்வதைப்பார்த்து விட்டு கணேஷ் எங்கள் பின்னால் நூலகத்திற்கு வந்து விட்டான். அவன் முதல் முறையாக நூலகத்திற்குள் வந்ததால் ஏது எங்கிருக்கு என்று தெரியாமல் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு நின்றான்.

அப்பொழுது அங்கு உள்ள நூலகர் தம்பி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அவன் பயத்துடன் எனக்கு ஓம்பதாம் வகுப்பு புத்தகம் வேண்டும் என்றான். அப்போது அந்த நூலகர் ஏன் பயப்பிடுகிறாய்? என்னுடன் வா என்று அழைத்துச் சென்று இந்த வரிசையில் ஒன்பதாம் வகுப்பு புத்தகங்கள் இருக்கு. நீ விரும்பியதை எடுத்துப் படி. உனக்கு ஏதும் உதவி வேண்டும் என்றால் என்னைக் கூப்பிடு என்றார். அவனும் சரி என்று சொல்லிவிட்டு புத்தகத்தை எடுத்து நின்றபடியே ஆசையில் பெரிதாக எழுத்துக் கூட்டி வாசித்தான். நானும் சக மாணவர்களும் கேலி செய்து சிரித்தோம். அதற்கு அந்த நூலகர் சத்தம் போட வேண்டாம் என்று கூறி விட்டு

'கணேஷிடம் யாராவது உன்னை ஒதுக்கி வைத்தாலும் கவலைப்படாதே . **யார் உன்னை எந்த தூரத்தில் வைக்கிறார்களோ அந்த தூரத்தில் வாழக்கற்றுக்கொள் அதனால் ஒரு நஷ்டமுமில்லை. உன்னோடு நான்தான் இருக்கிறேனே அது போதாதா'** என்று கிருஸ்ணர் கூறி இருக்கிறார். விளங்காவிட்டால் என்னிடம் கேள். என்று கணேஷிடம் கூறிவிட்டு சென்றார். கணேஷிற்கு அன்புகாட்ட ஒருவரும் இல்லாமல் இருந்தவனுக்கு அந்த நூலகர் ஒரு கடவுளாக தெரிந்தார். மறுநாள் மாலை நாங்கள் கதைப்புத்தகம் எடுப்பதற்கு நூலகம் சென்றோம். நூலகத்தினுள் கணேஷ் நிற்பதை பார்த்து வியந்து போனேன். நான் அவனிடம் செல்லாமல் மறைவாக நின்று என்ன செய்கிறான் என்று கவனித்தேன். அவன் ஒன்பதாம் வகுப்பு செயல் நூல் புத்தகங்களை எடுத்து நூலகரிடம் போய் இதை எப்படி செய்ய வேண்டும் என்று கேட்டான். அவரும் அவனுக்கு சிறு தாளில் எழுதி விளக்கம் கொடுக்கின்றார். நான் அவனைப் பார்த்து இவரிடம் படித்து இவன் என்ன செய்யப்போறான்...? என்று நினைத்துவிட்டு புத்தகம் எடுக்கச் சென்று விட்டேன். ஒன்பதாம் வகுப்பு 3ம் தவணைப் பரீட்சை வந்தது. பரீட்சை முடிந்து புள்ளிகளை வகுப்பாசிரியர் வியப்புடன் வந்து கூறத் தொடங்கினார். புள்ளிகளைக் கேட்டவுடன் நானும் வியந்து போனேன். ஆனால் கணேஷ் மட்டும் அப்படியே இருந்தான். கணேஷின் புள்ளி எல்லாம் 40ற்கு மேல் இருந்தது. 32 மாணவர்களிடையே 16ம் இடத்தை பிடித்தான். அன்றுடன் முடியவில்லை அவனின் பயணம். 10ம் வகுப்பு 1ம் தவணையில் 9ம் பிள்ளையாகவும், 2ம் தவணையில் 5ம் பிள்ளையாகவும், 3ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தவணையில் 5ம் பிள்ளையாகவும், 3ம் தவணையில் 3ம் பிள்ளையாகவும் வந்தான். 11ம் வகுப்பில் பாடசாலையில் மாணவ தலைவன் ஆனான். பல விளையாட்டிலும் அவன் பல சான்றிதழ்களை பெற்றான். பின் O/L பரீட்சையில் அவன் சைவசமயப் பாடத்தில் இலங்கை ரீதியில் 3ம் இடத்தைப் பெற்றான். அந்த ஆண்டு என்னை மட்டும் இல்லாமல் பாடசாலையையே வியப்பில் ஆழ்த்தினான். நூலகர் உட்பட அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். நான் இப்பொழுதும் அவனுடன் நண்பனாக இருக்கிறேன். இன்னும் நான் ஒரு தலை குனிந்த மனிதனாகதான் இருக்கிறேன். காரணம் நானும் அவனை கேலி செய்ததில் ஒருவன் என்றதால். கணேஷ் பாதையில் இன்றுவரை கல்வி எனும் அருவி ஓடி கொண்டுதான் இருக்கின்றது. கணேஷ் வாழ்வில் அடிக்கல் நாட்டியது எவரும் இல்லை. அந்த நூலகமும் நூலகரும்தான் என்பதை நான் நேரடியாக பார்த்தேன்.

**' இறைவனின் வார்த்தை '**

'தாழ்த்தப்படுபவன் என்றோ ஒருநாள் உயர்த்தப்படுவான்.' என்பது கணேஷின் வாழ்வில் உண்மை ஆகிவிட்டது. என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை.

பல கோடி ரூபாய் புத்தகங்களை தன்னகத்தே கொண்ட நூலகம் ஒரு பிரதிபலனையும் பார்க்காமல் அறிவை மாத்திரம் தரும் அறிவு அன்னையாகவே நான் பார்க்கிறேன்.

நன்றி.

## புத்தகங்கள் படைக்கும் புத்துலகம்

*"புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டின்*

*புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"*

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

*"வெள்ளத்தின் பெருக்கைப் போல*

*கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின்*

*பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்*

*விழிபெற்றுப் பதவி கொள்வார்"*

என்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆற்றங்கரை அப்பா

ஜுனைதா ஷெரீப்

ஆற்றங்கரை அப்பா கபுறடியைப் பற்றி எங்களது பகுதிலுள்ள அனைத்து முஸ்லிம் கிராமங்களில் வசிப்பவர்களுக்கும் தெரிந்திருந்தது.

எனது கிராமத்திலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர்கள் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் தார் பாதையில் பிரயாணம் செய்து, நாற்தெருக்கள் சங்கமிக்கும் சந்தியை அடைந்து, அங்கிருந்து வலது புறமாகத் திரும்பி செம்மண் புழுதி வீசும் வழியூடாக சரியாக இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால் கபுறடியை அடைந்து விடலாம்.

ஐம்பது மீட்டருக்கும் குறைந்த அகலமான வம்மி ஆறு மழை நாட்களில் நுங்கு நுரைகளுடன் ஓடிக்கொண்டிருக்கும். அதன் ஓரத்தில் அடி அகன்று, உயர்ந்து, பரப்பிய கிளைகளில் தொங்கும் விழுதுகளுடன் கூடிய ஆல மரமொன்றின் நிழலில் அமைதியே உருவாக அந்த சியாரமும், அதையொட்டியதான ஓர் அறை மட்டும் கொண்ட பள்ளிவாசலும் காட்சி தரும். இவைகளுக்குப் பின்புறமாக இரண்டு வேப்ப மரங்களும், இடப்பக்கமாக புளிய மரமொன்றும் நிழல் பரப்பியவாறு நின்றன. ஆற்றங்கரை ஓரத்தில் உச்சி வெய்யிலின் போது கூட தண்ணீர் சுடுவதில்லை.

கணுக்கால் அளவு நீருக்குள் நின்றுகொண்டிருக்கும் வேளையில் மேற்குப்புறமிருந்து ஆற்றில் எறியப்பட்டு தவழ்ந்து வரும் தென்றல் முகத்தையும், மார்பையும் முத்தமிடும் போது கிடைக்கும் சுகானந்தத்துக்கு ஒப்புவமையே கூற இயலாது.

கபுறடி பதின்மூன்றுக்குப் பத்து நீள அகலம் கொண்ட சிறியதொரு கட்டிடம். அதனுள் யார் என அடையாளம் தெரியாத ஒருவரின் கல்லறை. சில நூறு வருடங்களுக்கு முன்னர் வம்மி ஆற்றில் தோணியொன்றில் பயணம் செய்து கொண்டிருந்த முஸ்லிம் பெரியாரொருவர் கடுமையாக சுகயீனமுற்றதன் காரணமாக தொடர்ந்து செல்ல இயலாமல் அந்த இடத்தில் கரை தட்டி, அங்கேயே காலஞ்சென்றதாகவும், அவரின் ஜனாசா அடக்கப்பட்டதாக பின்னாட்களில் அடையாளம் காணப்பட்ட இடத்தில் கட்டிடமொன்றைக் கட்டியதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறும். ஆரம்பத்தில் கபுறடி மட்டும்தான் இருந்ததாகவும், பல வருடங்களுக்குப் பின்னர் தொழுவதற்கான அறையொன்றும் அங்கு அமைக்கப்பட்டதாக பேசிக்கொள்வார்கள்.

கபுறடியுடன் கூடிய பள்ளிவாசல் அமையப் பெற்ற இடம் முழுக்கவே தமிழ் மக்கள் அடர்த்தியாகக் குடியிருக்கும் பகுதியாகும். மதப் பெரியார் காலஞ் சென்ற, அவருக்காக கபுறடி கட்டிய காலத்தில் அந்தப் பகுதி மனிதர்கள் வசிக்காத பொட்டைக் காடாக இருந்திருக்கலாம். இப்போது நிலைமை முழுதாக மாறிவிட்டது.

எனது கிராமத்திலிருந்து மட்டுமல்ல, வேறு எந்த முஸ்லிம் ஊர்களிலிருந்தும் கபுறடிக்குப் போகவேண்டுமெனில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் வதியும் கிராமங்கள் பலதைக் கடந்துதான் ஆகவேண்டும்.

கபுறடி கட்டப்பட்ட ஆரம்ப காலங்களில் ஆற்றங்கரை அப்பாவின் அருளால் அங்கு பல அற்புதங்கள் நடைபெற்றதாக கிராமங்களில் பேசிக்கொண்டார்கள். பிள்ளையில்லாதவர்கள் அப்பாவின் அடக்கஸ்தலத்துக்கு அருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பரவிக்கிடக்கும் வெண்மணலைக் கழுவிய நீரைக் குடித்தால் கருத்தரிக்குமென்றும், வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் ஆலமர நிழலைக் கொண்ட ஆற்றின் கரையில் முழுக்காடி, கபுறடி மணலில் படுத்தெழும்பினால் நோய் பஞ்சாகப் பறக்குமென்றும், களவு போன பொருட்களைக் கண்டுபிடிக்க அடக்கஸ்தலத்திற்கு அருகில் இரவு வேளைகளில் எரிக்கப்படும் தேங்காய் எண்ணெய் விளக்கினுள்ளிருந்து சொட்டு எடுத்து உள்ளங்கையில் தடவி விட்டுப் பார்த்தால் களவெடுத்தவனின் முகம் தெரியுமென்றும்........ பகுத்தறிவுக்கு ஒவ்வாத கதைகளின் பட்டியல் நீளும்.

ஆற்றங்கரை அப்பாவின் கபுறடிக்குச் சென்று அற்புதம் பெற்று வந்தவர்களில் ஒருவரைத் தானும் எனது கிராமத்தில் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. காலங்கள் செல்லச் செல்ல மக்களின் அறிவு பெருகி இவைகளெல்லாம் யாரோ சிலரின் வருமானத்துக்காகக் கட்டிவிடப்பட்ட கதைகள் என்ற எண்ணம் வலுப் பெற்றது.

அப்பாவின் கபுறடிக்கும், பள்ளிவாசலுக்கும் செல்பவர்கள் பொதுவாக முஸ்லிம்களாக இருந்தாலும், வருடா வருடம் முஹர்ரம் மாதம் பன்னிரெண்டாம் பிறையன்று இரவு நடைபெறும் கந்தூரி வைபவத்தில் கலந்து கொள்ள வருபவர்களில் கணிசமானோர் தமிழ் மக்களாவர்.

முஹர்ரம் மாதம் முதல் பிறை தினத்தில் பிற்பகல் வேளையில் பிடரி மறைய முடி வளர்த்து, பச்சைக் குப்பாயம் அணிந்து, அதே பச்சை நிறத் துணியால் பின் குஞ்சத்துடன் கூடிய தலைப்பாகை தரித்து, கழுத்து நிறைய குண்டு குண்டான முத்து மாலைகள் ஜொலிக்க, கைகளில் றபான்களுடன் பல ஊர்களிலிருந்தும் பக்கீர்கள் ஆஜராகி, கபுறடியின் முன்னால் நிமிர்ந்து நிற்கும் கம்பத்தின் உச்சியில் அகன்ற கொடியொன்றை ஏற்றுவர். அன்று இரவு தொடக்கம் தினசரி அவர்களின் றாத்தீபு நடைபெறும்.

றாத்தீபு நிகழ்ச்சியைப் பார்ப்பதென்றால் என்னைப்போன்ற இளைஞர்களுக்கு ஏகப்பட்ட ஆனந்தம். பிறை பன்னிரெண்டாம் இரவு இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள பல கிராமங்களிலிருந்தும் தமிழ், முஸ்லீம்களாக ஆயிரக்கணக்கானோர் வருகை தருவர். நிகழ்ச்சியின் இறுதியில் வழங்குவதற்காக விசாலமான கடாரங்களில் பாற்சோறு சமைப்பதற்கான தாளிப்பு வாசம் வம்மி ஆற்றின் மறு கரையில் நிற்பர்களுக்குக் கூட வயிற்றில் கடமுடா சப்தங்களை உண்டாக்கும் எனப் பேசிக்கொள்வார்கள்.

அந்த வருட கொடியேற்றத்தின் இறுதி நாள் நிகழ்ச்சி ஒரு சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளதாக அறிந்தோம். அடுத்த நாள் விடுமுறையாகையால் மம்மத்தம்பி, கனிபா, நூர்தீன், இஸ்மாயில் என நாங்கள் நண்பர்கள் சிலர் அதிகாலையிலேயே சைக்கிள்களில் புறப்பட்டோம். போகும் வழியில் ஏற்கனவேயே பேசி வைத்திருந்தவாறு வெவ்வேறு கிராமங்களில் வசிக்கும் எங்களது பாடசாலை நண்பர்களான இராசையா, கந்தசாமி, கணபதி, முத்துலிங்கம் ஆகியோர்களின் வீடுகளுக்கும் சென்று அவர்களுடைய பெற்றோரால் தரப்பட்ட இளநீரையும், மோரையும் குடித்து தாகம் போக்கி....... அவர்களையும் எங்களோடு சேர்த்துக்கொண்டோம்.

பத்து மணி சுமாருக்கு கபுறடியை அடைந்தோம். எங்களைப் போன்று வேறு கிராமங்களிலிருந்தும் வந்திருந்த பலர் அங்கு நின்றனர். காற்சட்டைகளிலிருந்தும் சாறன்களுக்கு மாறி, தற்காலிக ஹோட்டலில் தேநீர் குடித்து, ஆல மர விழுதுகளில் ஊஞ்சலாடி, சுட்டெரிக்கும் வெய்யிலிலும் கால்கள் பட்டவுடன் குளிர் தாக்கிய ஆற்று நீரில் முழுகி, தவழ்ந்து வந்த குளிர் தென்றலை வெற்றுடம்புகளில் பூசி, நீரினுள்ளால் நீந்திச் சென்று ஆளையாள் தெரியாமல் கால்களைப் பிடித்து வாரி விட்டு......

பள்ளிவாசலில் கேட்ட பாங்கொலியைத் தொடர்ந்து முஸ்லீம்களாகிய நாங்கள் ஆற்று நீரில் வுளு செய்து, தொழுது, வீடுகளிலிருந்து எடுத்துச் சென்றிருந்த சோற்றுப் பொதிகளை ஒன்றாக சீலையொன்றில் கொட்டி, வெட்டிய வாழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலைகளில் அள்ளி வைத்துச் சாப்பிட்டு, தென்றல் வீசியதால் கண்ணயர்ந்து புளிய மர நிழலில் உறங்கி.......

இரவு கந்தூரிக்குப் பின்னர்தான் பக்கீர்மார்களின் றாத்தீபு எனப் பேசிக்கொண்டார்கள். பொழுது படும் வேளையில் முஸ்லீம்களும், தமிழர்களுமாக சனக்கூட்டம் தத்தளிக்கத் தொடங்கியது.

கந்தூரி முடிந்த சற்று நேரத்தின் பின் பக்கீர்மார்களின் நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு அறிகுறியாக தஹறாக்கள் தட்டப்பட்டன. அவர்களின் கலீபா நீண்ட வெண் தாடியுடன் நடுநாயகமாக வீற்றிருந்தார். ஊதுபத்திகளின் புகைப்படலம் மேலெழுந்து காற்றோடு கலந்து பக்திமயமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. கலீபா சப்தமிட்டு எததையெல்லாமோ ஓதினார். சொல்லி வைத்தாற்போல் சுற்றிவர வீற்றிருந்த சகல பக்கீர்களும் ஏக நேரத்தில் தங்களுடைய இடது கைகளில் தூக்கிப் பிடித்திருந்த தஹறாக்களை வலது கைகளினால் தட்டத் தொடங்கினர்.

நீண்ட நேரமாக தஹறா தட்டுவதும், பாடல்களைப் பாடுவதுமாக பக்தி சன்னதமான நிலையில் சபையை வைத்துக்கொண்டிருக்கும் போது, பக்கீர்களில் ஒருவர் எழுந்து மத்தியில் குவிந்து கிடந்த கூரிய ஆயுதங்களில் ஒன்றை எடுத்து, கலிபாவின் எதிரில் பவ்யமாக நீட்டி, அவர் தனது நாக்கில் வடிந்த உமிழ்நீரை வலது கை பெரு விரலால் நீவி ஆயுத முனையில் தடவி ஆசிர்வதிக்க, இவர் யாரும் எதிர்பாராத வேளையில் அதை வாயினுள் செலுத்தி கன்னச்சதையினூடாக முனையை வெளியே தள்ளினார். நான் சடுதியாக கண்களை மூடித் திறந்தேன். முன்னங்கை தோலினுள்ளால் சொருகுவதும், உச்சந்தலையில் வைத்து அறைந்து தலைக்குள் ஏற்றுவதும், நாக்கை வெளியே இழுத்து அதனுள் ஆயுதத்தை ஏற்றுவதுமாக......... அப்போதெல்லாம் ஒரு சொட்டு இரத்தம் கூட வெளிவராதது இன்னும் எனக்கு ஆச்சரியம் தான்.

ஆற்றங்கரை அப்பா கபுறடியுடன் கூடிய பள்ளிவாசலுக்கு ஐங்காலத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக எனது கிராம பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர்களால் முத்துக்காக்கா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். சியாரம், பள்ளிவாசல் ஆகியவற்றையும், அவைகளைச் சுற்றிவர ஆற்றங்கரை வரையுமுள்ள பகுதியையும் சுத்தமாக வைத்திருத்தல், ஐவேளையும் பாங்கு சொல்லுதல், தொழுவித்தல், மாலைவேளைகளில் விளக்கேற்றுதல் போன்றவை இவருக்காகச் சாட்டப்பட்டிருந்த பணிகளாகும். இவர் எனது தகப்பனாருக்கு தூரத்து சொந்தக்காரனும் கூட. வயது ஐம்பதுக்கு மேல் இருக்கலாம்.

முத்துக்காக்கா ஒருநாள் பிற்பகல் எங்களது வீட்டுக்கு வந்தார். வாப்பாவுடன் அவர் கதைத்துக் கொண்டிருக்கும் போது நான் அருகே நின்றேன்.

"முத்து. பள்ளிக்கு தொழ ஆக்கள் வாராகளா?" வாப்பா கேட்டார்.

"எங்க வாராக. சுற்றி வர இருக்கிற எல்லாருமே தமிழ் ஆக்கள். மருந்துக்குக்கூட நம்ம ஆக்கள் அந்தப் பகுதியில இல்ல."

"அப்போ நீ மட்டும் தான் தனியே தொழுது கொள்றே?"

"சே.சே. அப்பிடியும் சொல்லக்கூடா. அந்தப் பகுதிக்கு வியாபார நோக்கமா வாரவங்க அங்கதான் பகல் தொழுகைக்கு வருவாங்க. ஆத்தில தோணியிலே போரவங்க எப்போதாவது இருந்திருந்துட்டு தோணியை தரை தட்டி தொழுதுட்டுப் போவாக."

"அங்கெல்லாம் என்ன யாவாரத்துக்கு வாராக?"

"முட்ட வாங்க, பழைய வெள்ளி தங்கம் வாங்க, அலுமினிய பாத்திரங்கள் துணிமணிகள் விக்க, மாடாடு வாங்க...... நீங்க வந்து பாக்கணுமே ஒரு நாளைக்கு எத்தனை பேர் நம்ம ஆக்கள் அந்தப் பகுதிக்கு வாராங்கன்னு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாப்பா என்ன நினைத்தாரோ சடுதியாகக் கேட்டார்.

"ஏன் முத்து, உங்கட சாப்பாடெல்லாம் எப்படி?"

"அதைச் சொன்னா ஆச்சரியப்படுவீங்க."

"ஏன்?"

"கிழமையிலே ரெண்டு மூணு நாள்தான் நான் சமைப்பேன். மற்ற நாட்களிலே இலவசம் தான்." முத்துக்காக்கா கூறிவிட்டுச் சிரித்தார்.

"அங்க தான் நம்ம ஆக்கள் இல்லியே. இலவசமா எப்படி?"

"நான் பள்ளிவாசல்ல தனியா இருக்கிறேன்னு அக்கம் பக்கத்திலே இருக்கிற ஊட்டுக்காரங்க வேளா வேளைக்கு சாப்பாடு அனுப்புவாங்க."

"ஆரு.... தமிழ் ஆக்களா?"

"பின்னே?"

அவர் கூறியது எனது வாப்பாவை விட அந்த இளம் வயதில் என்னை மலைக்க வைத்தது. நாட்கள் வாரங்களாக மாதங்களாக வருடங்களாக கழிந்தன. கல்வி பொருளாதார சமூக மாற்றங்கள் வேக வேகமாக இடம் பெற்றுக்கொண்டிருந்தன. அரசியல் சிந்தனைகள், இனங்களுக்கிடையிலான வித்தியாசங்கள், வியாபார அரசியல்வாதிகளின் உள்நுளைவுகள், பேரினஆதிக்கங்கள்..... ஆகியனவெல்லாம் போட்டிபோட்டு மக்களின் அமைதியான வாழ்க்கையுடன் விளையாடத் தொடங்கின. பேச்சு வார்த்தைகளும் ஏமாற்றங்களுமான சங்கதிகள் பங்கு பிரித்துக் கேட்கக்கூடிய அளவுக்கு ஓர் இனத்தை ஆக்கின. நாளாக ஆக பிரச்சினைகளின் தாக்கமும் வேகமும் கூடி இறுகி வக்ரமடைந்த மனங்களையுடையவர்களாக மக்களை மாற்றி......

நாட்டில் இன வன்செயல்கள் நடைபெறத் தொடங்கின. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை நாளாந்த நிகழ்வுகளாகி..... முஸ்லீம்களுக்கும், தமிழர்களுக்கிடையிலான இனப் பகை ஆரம்பமாகியது. ஆளையாள் வெட்டுதல், கொத்துதல், கூட்டத்தோடு கும்பலாகக் கொலை செய்தல், வாகனங்கள் சொத்துக்கள் போன்றவற்றின் சேதங்கள், ஆட்கடத்தல் கட்டிட உடைப்புக்கள்...

ஓர் இனத்தின் பரவலாக வாழும் கிராமங்களுக்குள்ளால் மற்ற இனத்தினர் பிரயாணம் செய்யத் தயங்கும் நிலை. எல்லைகளைக் கடக்கு மட்டும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடவேண்டிய இக்கட்டு. முஸ்லிம் கிராமங்களுக்குள் தொழில் செய்து பிழைப்பவர்களின் அடிவயிறுகளில் வீழ்ந்த அடிகள் அவர்களின் வீட்டு அடுப்புகளுக்குள் பூனைகள் சுருண்டு படுக்க வேண்டிய நிலைக்கு ஆக்கின. தமிழ் மக்கள் பரவலாக வாழும் பகுதிகளுக்குள் வியாபாரம் செய்து பிழைப்பவர்கள் பழைய துவாய்த் துண்டுகளை தோள்களில் போட்டவாறு ஏக்கப் பெருமூச்சுகளுடன் தெருச்சுற்றினர்.

நல்லவர்களின் மனங்கள் குமுறி அழுதன.

நான் படித்து, பட்டதாரியாகி, ஆசிரிய தொழிலில் சேர்ந்து கிராமத்திலுள்ள எனது சொந்தக்காரப் பொண்ணொருவரைத் திருமணம் செய்து, வேறு பல பரீட்சைகளில் சித்தியெய்தி தூரத்திலுள்ள பட்டிணமொன்றில் கல்விக் காரியாலயத்தில் கடமையாற்றிக்கொண்டிக்கிறேன்.

பெருநாள் விடுமுறையொன்றின் போது மனைவி, பிள்ளைகளுடன் கிராமத்துக்குச் சென்றிருந்தேன். பெரிய ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அஸர் தொழுகைக்காகச் சென்ற சமயத்தில் அகஸ்மாத்தாக முத்துக்காக்காவைச் சந்திக்க நேர்ந்தது.சுருங்கிய தோலும், வழுக்கைத் தலையும், நீண்ட வெண்தாடியுமாக கையில் பிடித்த கோலொன்றுடன் தொழ வந்திருந்தார். என்னை அறிமுகப்படுத்தியதும் இனங்கண்டு கொண்டார். ஆற்றங்கரை அப்பா சியாரம், பள்ளிவாசல் ஆகியவைகளைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெரிந்துகொள்ள வேண்டுமென அவாவுற்றேன்.

"அதை ஏன் கேக்கீங்க மகன். நம்ம பகுதியிலே நடந்த கூத்துக்களையெல்லாம் நீங்க அறிந்துதானே இருப்பீங்க. இத்தனை சம்பவங்களும் நடைபெற்ற பின்னாடியும் அந்தக் கட்டிடங்களை அப்படியே வைச்சிருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா?" அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

"நான் நினைக்கிறது இருக்கட்டும். கட்டிடங்களை இடித்துப்போட்டாங்கன்னு தகவல் கிடைச்சிருக்கா?"

"அப்படி ஒன்னும் இல்ல. ஒரு ஊகம் தான்."

"ஆருமே போய்ப் பார்க்கலையா?"

அவர் குழி விழுந்த கண்களால் என்னைப் பார்த்தார்.

"போறதா? பார்க்கிறதா? எப்படித் தம்பி அந்த இடங்களுக்கெல்லாம் போறது? நம்ம ஆக்களின் நாத்தமே அந்தப் பகுதியிலே இல்ல. அப்படித்தான் போனாலும் நன்மைக்குத் தீமையா ஏதாவது ஆகிட்டா?"

"இப்பதான் பிரச்சினைகள் சுமுக நிலைமைக்கு வந்திட்டே. போய்ப் பார்த்தால் என்ன?"

"என்னமோ உங்கட இஷ்டம்."

முத்துக்காக்கா என்னதான் சொன்னாலும் ஆற்றங்கரை அப்பா சியாரத்தினதும், பள்ளிவாசலினதும் நிலையை அறியவே வேண்டுமென மனம் துடித்தது. அதற்கேற்றாற்போல அடுத்த நாள் சந்தைக்கூடத்தில் எனது பாடசாலை நண்பன் கணபதியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அடுத்து வந்த ஞாயிறு காலை சுப்ஹு தொழுகையை முடித்த கையுடன் நானும், மம்மத்தம்பியும், கனீபாவும் ஆற்றங்கரை அப்பா பள்ளிவாசலுக்குப் போவதற்காக ஆயத்தமானோம்.

"எதற்கும் சில ஆயுதங்களையும் எடுத்துக் கொள்வோம்" என்றான் கனீபா.

"எதுக்கு?" நான் கேட்டேன்.

"ஏதாவது ஏடாகூடமா ஆகிட்டா நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமல்லவா?"

நான் வாய்விட்டுச் சிரித்தேன்.

"நான் மனிதர்களை நம்புபவன். அவர்களை மதிப்பவன். இறைவன் குடியிருக்கும் இல்லத்தைப் பார்க்க கத்தி தடியுடனா போவது?"

எனது காரில் புறப்பட்டுச் சென்ற நாங்கள் வழியில் பாதையோரமாகக் காத்து நின்ற கணபதியை ஏற்றிக்கொண்டோம். முத்துலிங்கத்தின் வீட்டுக்குச் சென்று அவருடன் கதைத்து எங்களுடன் சேர்த்துக்கொண்டோம்.

நாற்சந்தியிலிருந்து பிரிந்து சென்ற மணல் பாதை தார்வீதியாக மாறியிருந்தது. பொட்டல் காடுகள் அழிக்கப்பட்டு பாதையின் இரு மருங்கும் உயர்ந்த கல் வீடுகள் உருவாகியிருந்தன.

காலை எட்டு மணிக்கெல்லாம் போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைந்து விட்டோம். காரை பாதையின் ஓரமாக நிறுத்தி விட்டு இறங்க..... சியாரம், பள்ளிவாசல் கட்டிடங்கள் எங்களைப் பார்த்துச் சிரித்தன. ஆல மரத்தின் விழுதுகளும், வேம்பு புளிய மரங்களின் இலைகளடர்ந்த கிளைகளும் மெதுவாக அசைந்து வரவேற்றன.

ஆவல் மிகுதியால் நான்கு எட்டில் பூட்டியிருந்த கட்டிடங்களை அடைந்து ஜன்னல் கிரில்களினூடாக உள்ளே எட்டிப் பார்த்தேன். லாந்தரொன்று இன்னும் சிறிது நேரத்தில் உயிரை விடப் போகிறேனென உமிழ்ந்துகொண்டிருந்தது. நாங்கள் ஆளையாள் ஆச்சரிய விழிகளால் பார்த்துக்கொண்டிருக்கும் போது பக்கத்து வீடொன்றின் கேட்டைத் திறந்தவாறு கையில் விளக்குமாறுடன் வந்த சராசரி வயது மதிக்கத்தக்க பெண்மணியொருவர் கட்டிடங்களின் முற்றத்தில் வீழ்ந்து கிடந்த பழுத்த இலைகளைப் பெருக்கத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நீங்களெல்லாம் ஆரு?" கேட்டார்.

சொன்னோம்.

"கடவுளே! இத்தனை வருசங்களுக்குப் பொறகு இப்பதான் உங்க பள்ளிவாசலைப் பாக்க வாறீகளா? கொஞ்சம் நில்லுங்க. ஆறுமுகம் அண்ணனைக் கூட்டிக் கொண்டு வாறன்."

சியாரம், பள்ளிவாசல் கட்டிடங்களில் எந்த உடைவுகளும் இருக்கவில்லை. மாறாக, சமீபத்தில் வெண்சாந்து பூசப்பட்டதற்கான ஆதாரங்கள் தெரிந்தன.

சுமார் கால் மணி நேரத்தினுள் நெற்றியில் விபூதி பூசிய அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் வேஷ்டி அணிந்து, பருத்துப் பரந்த மார்பை துவாயால் போர்த்தியவாறு எங்களை நோக்கி வந்தார். முகமலர்ந்தார். எங்களை அறிமுகப்படுத்தினோம்.

"இத்தனை நாட்கள் நீங்க ஆருமே இந்தப் பள்ளிவாசல் இருக்குதா இல்லியான்னு கூட பாக்க வரல்லியே" என்றார் பொய்க் கோபத்துடன்.

"நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் உங்களுக்குத் தெரியும்தானே" என்றேன் நான்.

"ஐயா, இந்தப் பகுதியிலே உள்ளவங்கஇந்தக் கட்டிடங்களையெல்லாம் இடித்து தரைமட்டமாக்கியிருப்பாங்க எனத்தான் நாங்க நினைச்சியிருந்தோம்" என்றான் கனிபா.

"இடிக்கிறதா?" கூறிவிட்டு ஆறுமுகம் இடியிடியெனச் சிரித்தார்.

"வன்செயல் உக்கிரமான ஒரு சமயத்திலே வேற ஊர்களிலேயிருந்து இவைகளை இடித்து நொறுக்குவதற்காக ஒரு கும்பல் வந்தது உண்மைதான். ஆனா, நாங்க ஊர் மக்கள் சகலரும் ஒன்றாக எதிர்த்து நின்று அவங்களைத் துரத்தி விட்டோம்."

"நீங்க சொல்லும்போது மயிர்கள் புல்லரிக்குது" என்றான் மம்மத்தம்பி.

"இது ஆண்டவன் வாழும் இல்லம் ஐயா. மார்க்கம் என்பது என்ன? ஒருவன் நிம்மதியாக வாழுவதற்கு வழி காட்டுவது. அத்தகைய ஒரு மார்க்கத்துக்குச் சொந்தமான பள்ளிவாசலை பிறிதொரு மார்க்கத்தைப் பின்பற்றும் ஒரு சாரார் இடிக்கலாமோ? கூடாது ஐயா! கூடவே கூடாது.! நாங்க இதை இடித்தா கடவுளின் பழி எங்கள் மீது இறங்குமே தவிர எங்களுக்குப் பாவ விமோசனமே இல்லாமப் போகும். வாங்க, உள்ளே போய்ப் பார்க்கலாம்" இடுப்பில் சொருகியிருந்த சாவிக்கொத்தை கையில் எடுத்தவாறு ஆறுமுகம் அழைத்தார்.

பள்ளிவாசலின் படிக்கட்டை நெருங்கினோம். முஸ்லீம்களாகிய நாங்கள் மூவரும் சாப்பாத்துக்களைக் கழற்றியபோது, ஆறுமுகம் தான் அணிந்திருந்த செருப்புக்களைக் கழற்றி விட்டு எதிரே நிலையில் அடித்திருந்த ஆணியொன்றில் தொங்கிய உறையொன்றினுள்ளிருந்து இரண்டு காலுறைகளை எடுத்தார். கால்களில் அணிந்தார்.

"ஐயா இதை ஏன் அணிகிறீங்க?" கனிபா ஆவலை அடக்கமுடியாமல் கேட்டான்.

"ஆண்டவனைத் தொழும் அறைக்குள்ள நீங்க கால்களைக் கழுவிவிட்டுத்தான் போவீங்க என்பது எனக்குத் தெரியும். நான் என் அழுக்குக் கால்களோட அந்தத் தரையிலே மிதிக்க விரும்பல்ல. ஊதுபத்தி கொளுத்த, விளக்கேற்ற, ஒட்டடை தூசி துடைக்க, கூட்டிப் பெருக்க....... இப்படி பல தேவைகளுக்காக நான் தினசரி உள்ளே போகும்போதெல்லாம் இவைகளை அணிந்துகொள்வேன். உங்களுக்குத் தெரியுமா ரெண்டு மேசன்மாரைப் பிடித்து உள்ளேயும் வெளியேயும் சுவர்களுக்கு வெள்ளை அடிப்பித்தேன். அவங்களுக்குக்கூட காலுறை வாங்கிக் கொடுத்துப் போடச் சொன்னேன்."அவர் எனக்கு இமயமாகக் காட்சி தந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உபநிடத உரையாடலில் கருத்துமுதல்வாதத்தின் வகிபங்கு

# The concept of idealism in the Upanishad dialogue

திரு. கு. தவசீலன்/ Mr. K. Thavaseelan

**Abstract**

The Upanishad is an adaptation of all philosophies in Indian philosophy. The term of the word 'Upanishad' means closer to the word nisat means direct meaning. The Upanishads are the ones that are closely interconnected with a qualified disciple to reach the same level of spirituality. This is the end of the Scripture, there are evidence for the availability between before from 8th century to 5th century mentioned by many authors in different articles. In this subdivision, the Guru is the Guru's disciple, the father-son, husband - wife, god-devotee, sage-student, in the conversations of Brahmam, soul, and the world about the conceptual arguments and inquiries of the lateral theories of Advaita, Vishitavita, Duvata, Based on the look Located.

Controversy is the concept of the primary idea that the concept is the only concept, the idea that everything is fundamentally based on opinions. On the basis of the material, such as the world, soul and god. The argument for the subject is the first argument of the subject. But the Upanishads can only be seen to be of great importance to ideas. Therefore, the review will be carried out by analyzing comparative, statistical and historical methods to analyze the subdisciplinary dialogue-based literature only on the basis of how the philosophical concept of the Upanishad dialogue is built on the basis of idealism.

**Key words:** Upanishad, dialogue, Idealism, soul, Brahman, world

**ஆய்வுச்சுருக்கம்**

இந்திய தத்துவ வளர்ச்சியில் அனைத்துத் தத்துவங்களுக்கும் அடிநாதமாக விளங்குவது உபநிடதமே ஆகும். உபநிடதம் என்ற சொல்லின் பொருள் 'உப' என்றால் நெருங்கி 'நிஷத்' என்றால் அமர்தல் என்பதும் நேரடியான பொருளைத் தருகின்றது. அதாவது ஆன்மீக நிலையில் உயர்ந்தோனாகிய குரு அதே நிலையை அடைய தகுதி உடைய சீடனை நெருக்கமாக அமர்த்தி அவருடன் இரகசியமாக உரையாடிய உரையாடலே இவ் உபநிடதங்கள் ஆகும். வேதத்தின் இறுதிப்பகுதியாக அமைந்த இது கி.மு 8 தொடக்கம் கி.மு 5 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்திற்குரியவை என பலர் குறிப்பிடுகின்றனர். இத்தகைய உபநிடதத்திலே குருகுலக் கல்வி முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குரு சீடர்களாக, தந்தை –மகன், கணவன் - மனைவி, கடவுள் - பக்தன், முனிவர் - மாணவன், எனும் உறவு நிலைகளில காணப்பட்ட பிரம்மம், ஆன்மா, உலகம் பற்றிய கருத்துமுதல் வாதரீதியான உரையாடல்களும் விசாரணைகளுமே பிற்கால தத்துவங்களான அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலிய தத்துவங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

கருத்துமுதல் வாதம் என்பது கருத்துக்கு முதன்மை கொடுத்து கருத்து மாத்திரம் தான் உண்மை, அனைத்திற்கும் கருத்தே அடிப்படை ஆகவே இந்த உலகு, ஆன்மா, இறைவன் போன்ற பௌதிக அதீதம் சார்ந்த விடயங்கள் அனைத்தும் கருத்துக்களின் அடிப்படையிலே கட்டமைக்கப்பட்டுள்ளது என்று கூறுகின்ற வாதமே கருத்துமுதல் வாதம் ஆகும். பொருளுக்கு முதன்மை கொடுக்கின்ற வாதம் பொருள் முதல் வாதம் ஆகும். ஆனால் உபநிடதங்கள் கருத்துக்களுக்கு மாத்திரம் அதிகம் முக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் காணமுடிகின்றது. ஆகவே உபநிடத உரையாடல் வழி அமைந்த தத்துவக் கருத்துக்கள் அனைத்தும் எவ்வாறு கருத்துமுதல் வாதத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதனை ஆராயும் நோக்கோடு உபநிடத உரையாடல் சார்ந்த இலக்கியங்களை மாத்திரம் ஆய்வு எல்லையாகக் கொண்டு ஒப்பீடு, விபரணம், வரலாற்றியல் முதலிய ஆய்வு முறைமைகளை கையாண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

**திறவுச்சொற்கள்** : உபநிடதம், உரையாடல், கருத்துமுதல் வாதம், ஆன்மா, பிரம்மம், உலகு.

**அறிமுகம்**

சைவத்தின் பொது நூலாகிய வேதத்தின் இறுதிப் பகுதியாக அமைந்துள்ள உபநிடதங்கள் தத்துவங்களின் ஆணிவேராகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றன. இதனால் இந்திய தத்துவ மரபின் தொடக்கப்புள்ளியாக உபநிடதத்தை சொல்வதுண்டு. அதனாலே அதற்கு ஞானகாண்டம் என்ற பெயருமுண்டு. (கிருஷ்ணவேணி, 2008, p.21) புறவுலகைப் புறம் தள்ளிவிட்டு அல்லது அதில் காலூன்றி நின்று கொண்டு அகவுலகத்தில் சஞ்சரிக்கின்ற அதாவது பௌதிகத்திற்கு முதன்மை அளிக்காமல் பௌதிகத்திற்கு அப்பாலான உணர்வுகளாக அமைவது கருத்துமுதல் வாதம் எனப்படும். ஆதலால் இது அப்பாலைத் தத்துவம், பௌதிக அதீதம், மீன்மியம், புலன் கடந்த மெய்யியல் என பலவாறு அழைக்கப்படுகின்றது. (வானமாமலை, 2008, p.2).

இவை அனைத்தும் அக்கால குரு – சீட பாரம்பரியத்திற்கிடையே நடந்த உரையாடல் வழி கருத்துக்கு முதன்மை கொடுத்துக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அது எவ்வாறு உரையாடல் வழி கருத்து முதல் வாதத்திற்கு முதன்மை கொடுத்துக் கட்டமைக்கப்பட்டு பிற்கால தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதனைத் தெளிவுபடுத்தும் வகையில் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வாய்வானது முதன்மைத் தரவுகளாக உபநிடதங்களையும், இரண்டாம் நிலைத்தரவுகளாக உபநிடத தத்துவம் சார்ந்து வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது. அடிப்படையில் இது விவரண ஆய்வாகவே அமைகிறது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரலாற்று ஆய்வு முறையும், பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறையியலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களுக்கு மாத்திரம் அடிக்குறிப்பு இணைக்கப்பட்டிருக்கின்றது.

**ஆய்வு முன்னோடிகள்**

உபநிடதங்களின் மையப்பொருட்களான பிரம்மம், ஆன்மா, உலகு, கன்மம், மறுபிறப்பு சம்பந்தமாக பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக நடராஜசிவாச்சாரியார் (2007) எழுதிய 'உபநிடதங்களின் சாரம்' என்ற நூலில் உபநிடதத்தில் கூறப்பட்ட தத்துவக் கருத்துக்கள் அலசி ஆராயப் பட்டுள்ளது. செ. தனபாலசிங்கம் (ஆ. இ) அவர்கள் எழுதிய 'உபநிடத சிந்தனைகள்' என்ற நூலிலே உபநிடதம் கூறும் தத்துவார்த்தக் கருத்துக்களும் அது எவ்வாறு பிற்கால தத்துவங்களுக்கு அடிப்படையாக இருக்கிறது என்பன பற்றியும் சுருக்கமாக ஆராயப்பட்டிருக்கிறது. ஆனால் உபநிடதத்தில் கருத்து முதல்வாதம் தொடர்பாக இதுவரை எந்தவொரு ஆய்வும் வெளிவரவில்லை. ஆகவே அதனை இவ்வாய்வு நிறைவுசெய்ய முற்படுகிறது.

**ஒப்பீடுகளும் விவாதங்களும்**

**உபநிடதம் குறித்த சிறு விளக்கம்**

வேதத்தின் ஞானகாண்டப் பகுதியாக விளங்குபவை உபநிடதங்கள். ஞானம் என்பது மெய்ப்பொருள் பற்றிய அறிவைக் குறித்து நிற்கிறது. இது பிரபஞ்சத்தின் தோற்றம், அதன் ஒடுக்கம், அதற்கு அடிப்படையாக அமைந்த சக்தி, மனிதன், மனிதனது இயக்கத்திற்கு காரணமான உள்ளபொருள், இவற்றுக்கிடையே உள்ள தொடர்பு, மனித வாழ்வு, வாழ்வுக்குப் பின்னுள்ள இறப்பு, கர்மம், மறுபிறப்பு, மோட்ஷம் போன்ற பல்வேறு விடயங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்திருக்கின்றது. (கிருஷ்ணவேணி, 2008, p.21).

"உபநிஷத்" என்றால் மிக நெருக்கமாக கீழே இருத்தல் என்று பொருள்படும். இது குருவுக்கு அண்மையில் சீடர்கள் நெருங்கி இருந்து குரு கூறுகின்ற மறைஞானக் கோட்பாடுகளை சிரத்தையோடு கேட்டறிதல் ஆகும். இத்தகைய மறைஞான தத்துவக் கருத்துக்கள் அனைத்தையும் விளங்கிக் கொள்ளும் பக்குவமுடைய மாணவர்களுக்கே மாத்திரமே போதிக்கப்பட்டவை. அதனால் அதற்கு இரகசியம் என்ற பெயரும் உண்டு. (லக்ஷ்மணன், 2005,p.38).

இந்து சிந்தனை மரபில் உபநிடதம் என்ற பெயரில் உள்ள நூல்கள் இருநூறுக்கும் மேற்பட்டவை. அவற்றுள் நூற்றியெட்டு உபநிடதங்கள் பிரதானமானவை. அந்த நூற்றியெட்டிலும் பத்து உபநிடதங்களே மிக முக்கியமாகக் கருதப்படுபவை. அப்பத்துக்கும் சங்கரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விளக்கவுரை எழுதியதாகவும் அவற்றுள் பெரும்பாலானவை புத்தர் பிறப்பதற்கு முன்பே ஆக்கப்பட்டது எனவும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். காலத்தால் முற்பட்ட உபநிடதங்கள் வசன நடையிலே உள்ளன. காலத்தால் பிற்பட்டவை செய்யுள் நடையில் உள்ளன. இவ்வுபநிடதங்களை ஆக்கியவர்கள் முனிவர்கள் என்றும் அவர்கள் தெய்வ அருள் பெற்றவர்கள் என்றும் அவர்களுள் சிலருடைய பெயர்களைத் தவிர, அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுவர். (லக்ஷ்மணன், 2005, p.40). இத்தகைய உபநிடதங்களில் இடம்பெற்ற உரையாடல்களினூடாக கருத்துமுதல்வாதத்தினுடைய வகிபாகம் மதிப்பிடப்படுகிறது.

### கருத்துமுதல் வாதம் - ஒரு விளக்கம்

பொருளுக்கு இரண்டாவது இடம் கொடுத்து கருத்துக்கு முதன்மை கொடுக்கும் தத்துவத்திற்கே கருத்துமுதல் வாதம் என்று பெயர். (வானமாமலை, 2008, p.2) இதனை ஆத்மீக வாதம், மனம் முதல் வாதம், கற்பனாவாதம் என்று பலவாறு அழைப்பர். இது ஆன்மா, உணர்வு, மனம் ஆகியவற்றிற்கு முதன்மை தருகின்றது. உணர்வே அடிப்படை உண்மை நாம் புலன்களின் வழி அறியும் சடப்பொருளான இவ்வுலகமும் அதன் உற்பத்திப்பொருட்களும் ஆன்மாவைச் சார்ந்தே இருக்கின்றன.(வானமாமலை, 2008, p.2).

உபநிடதங்கள் கருத்துமுதல்வாதத்தை உள்ளுணர்வாகவும் மறைபொருளாகவுமே வெளிப்படுத்துகின்றன. சாதாரண விளிப்பு நிலையில் உண்மையாகத்தெரிகின்ற ஒன்று யோக நிலையிலும் ஞான நிலையிலும் பொய்மையாகிவிடுகிறது. புறக்காட்சியும் புறப்பொருளும் இல்லை ஆனால் ஆன்மா பிறவிக்கு உட்பட்டு உழல்கின்றது. ஒரு பொருள் என்பது புலன் உணர்வாக எண்ணமாக உள்ளத்துள் உள்ளது. இது பொருளோடு சம்பந்தம் அல்லது அறிவோடு ஏற்படும் சம்பந்தம் எனப்படுகின்றது. உண்மையில் உள்ளது நம் மனத்தின் எண்ணப்பிரதிபலிப்பே உலகமும் புறத்தோற்றங்களும் யதார்த்த உலகம், பிரத்தியட்ச வாழ்வு, இயற்கை ஆகிய இவை அனைத்தும் நம் கருத்தில் தான் உள்ளன என்று கூறும் வாதமே கருத்துமுதல் வாதமாகும். இதனை உபநிடத உரையாடல்கள் தொடக்கிவைத்துள்ளன. (வானமாமலை, 2008, p.2).

### கருத்துமுதல்வாத அடிப்படையில் பிரம்மம்

உபநிடதத்தில் காணப்படுகின்ற கருத்தியல் ரீதியான உரையாடல்களை ஆராய்ந்து பார்க்கின்ற வேளையில் குரு குலக் கல்வி முறையில் குரு சீடர்களாக தந்தை - மகன், கணவன் - மனைவி, கடவுள் - பக்தன், முனிவர் - மாணவன், கடவுள் - கடவுள் எனும் உறவு நிலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்றன. (வரதராஜன், 2015, p.38). இவ்வாறாக கருத்து முதல் வாதத்திற்கு முதன்மை கொடுத்து உரையாடல் வடிவில் இடம்பெற்ற பிரம்மம், ஆன்மா, உலகு பற்றிய மெய்ஞ்ஞான ஆராய்ச்சி தொடர்பான சம்பாசனைகளே பிற்கால தத்துவ வளர்ச்சிக்கு முன்னோடியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அமைந்து காணப்படுகின்றன. (கிருஷ்ணவேணி, 2008, p.30).

சாந்தோக்கிய உபநிடதத்திலே (அண்ணா,1957,pp.67-84). உத்தலாகலருக்கும் சுவேதகேதுவுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலைப் பார்க்கின்ற வேளையில் பிரம்மம் பற்றிய விளக்கம், பிரம்மத்தின் சர்வ வியாபகம், பிரபஞ்சத் தோற்றம் என்பன உரையாடப்படுகின்றன. அதாவது சுவேதகேது 25 வயது வரை குருகுல வாசம் செய்தும் உண்மைப் பொருளை அறியவில்லை. அவன் தந்தையாகிய உத்தலாகலர் அதனை விளக்குகின்றார். நதிகள் கடலில் பாய்ந்து செல்கின்றன கடலில் கலந்து விட்டு பிறகு இது நான் என்று அது தன்னைப் பிரித்துச் சொல்ல முடியுமா? அது எங்ஙனம் அறியும்? அவ்வண்ணமே இவ்வுலகத்துப் பிராணிகளெல்லாம் சத்திலிருந்து தோன்றியும் அதிலிருந்து தான் தோன்றுகின்றன என்று உணரவில்லை. மேலும் எது அது மாத்திரமான சூட்சும வஸ்த்துவாகவே அதுவே நீயாக உள்ளதாய் (தத் த்வ மசி) ஒரு சின்னஞ்சிறு வித்தில் இருந்து மிகப்பெரிய ஆலமரம் உண்டாகிறது அது உண்டாவதற்கு முதல் அந்த ஆலமரம் எப்படி சிறு விதைக்குள் அடங்கியிருக்கிறதோ அவ்வாறே இவ்வுலகம் முழுவதும் ஆத்மசக்தியில் அடங்கியிருக்கிறது (இராமநாதன், 2007, p.177)

தண்ணீரில் போட்ட உப்பு என்னவாகிறது? கரைந்து கண்ணுக்குத் தெரியாமல் போகிறது இருந்தும் அது அந்த தண்ணீர் முழுவதும் வியபித்திருக்கின்றதல்லவா? அதே வண்ணம் பரம்பொருள் இவ்வுலகில் மறைந்திருந்தாலும் எங்கும் வியாபித்தும் மறைந்து நிற்கிறது. ஆகவே ஆத்மா நீயும் அதுவே. கண்ணைக் கட்டி காட்டில் விட்டால் என்னவாகும்? அங்கேயே உழன்று கொண்டு இருக்க வேண்டியது தான் இவ்வண்ணமே முன் செய்த கருமங்கள் உள் ஞானத்தை மறைத்து போகக் கட்டுக்களால் கண்ணைக் கட்டி இந்த உலகம் என்னும் காட்டில் உன்னைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. ஊருக்கு எப்படித் திரும்பிப் போவது என்ற வழிவகை அறியாமல் பயந்து கொண்டு மயக்கத்தில் நிக்கிறாய் உனக்கு தகுந்த ஒரு குரு கிடைத்து உன் கட்டுக்களை அவிழ்த்து விட்டால் வழி தேடி ஊர் போய் சேருவாய். என பிரம்மம் பற்றிய உரையாடல்கள் கருத்தியலுக்கு முதன்மை கொடுத்து இடம்பெற்றன. (இராமநாதன், 2007, p.228).

பிருகதாரணிய உபநிடதத்திலே (அண்ணா, 1957, pp.133 - 230). ஞாக்கியவள்ளிக்கும் மைத்திரேயிக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலும் பிரம்மம் பற்றியதாகும்.

**கருத்துமுதல்வாத அடிப்படையில் ஆன்மா**

கட உபநிடதத்திலே நசிகேதனுக்கும் யமனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் ஆன்மா, கன்ம மறுபிறப்பு பற்றியது ஆகும். அதிலே மரணத்தின் பின்னர் ஆத்மாவின் நிலை யாது? என நசிகேதன் யமனிடம் கேட்கிறான். அதாவது உலகத்திலே ஒரு மனிதன் இறந்த பின் அவனது ஆத்மா தொடர்ந்து இருக்கிறது என சிலரும் அது தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இல்லை என்று ஒரு சிலரும் கூறுகின்றனர் இதில் எது உண்மை என்று நீர் எனக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்கிறான். அதற்கு யமன் நசிகேதா மனிதன் விரும்ப வேண்டியது என்பது ஒன்று. ஆனால் அவன் விரும்புவது வேறொன்று. இந்த இரண்டு இலட்சியங்களுமே வெவ்வேறு பயன்களை உடையவை விரும்ப வேண்டியது விடுதலை இதை விரும்புபவர்கள் இன்பமும் மற்றவர் துன்பமும் அடைகின்றனர் (சுவாமி ஆசுகோஷானந்தர், 2001, pp.45-52). 'அன்னப் பறவை நீரையும் பாலையும் பிரித்து பாலை மட்டும் உட்கொள்வது போல' அறிவுடைய ஒருவன் அந்த இரண்டு இலட்சியங்களையும் பகுத்து அறிந்து முக்தியை மட்டுமே விரும்புகிறான். (சுந்தரம், 2002, p.5).

இந்த உலகம் மட்டுமே உண்மை என்று எண்ணிக் கொண்டு இருப்பவர்கள் திரும்பத் திரும்ப மரணத்தின் வலைக்குள் வந்து விழுகின்றார்கள். அண்டத்தில் இருப்பதே பிண்டத்தில் உண்டு என உணர்ந்து ஜீவன் தான் வினைகளை அனுபவிக்கிறது என்று உணர்ந்து மெய்ப்பொருளை அறிந்தவன் மெய்ப்பொருள் ஆகிவிடுகிறான். இந்த உடம்பு அழிந்தால் ஆன்மாவும் அழியும் என்று எண்ணி அறியாமையில் மூழ்கி வாழ்ந்து விட்டவர்கள் மறுபடி மறுபடி பிறவி எடுக்கிறார்கள். அவர்களுள் தோற்ற வேற்றுமைகளுக்குள் ஒரே உண்மை இருப்பதை யார் அறிகிறார்களோ அவர்கள் தான் அமைதியும் ஆனந்தமும் பெறுகிறார்கள் (சுந்தரம், 2002, p.13) என்று கட உபநிடதத்திலே யமன் விளக்கமளிக்கிறார்.

நாரதர் சனத்குமாரர் ஆகியவர்களிற்கிடையே நடைபெற்ற உரையாடலும் ஆத்மா பற்றியதே ஆகும். ஆத்மாவைப் பற்றி அறிய வந்த நாரதர் சனற்குமாரரிடம் வினாவ அதற்கு அவர் பதில் அளிக்கிறார். அளவு கடந்தது எதுவோ அதுவே சுகமாகும். வேறு செல்வத்தில் சுகம் கிடையாது. அந்த அளவு கடந்ததை நீ அறிந்து கொள்ள வேண்டும். பார்ப்பதும் கேட்பதும் அறிவதும் கரணங்களின் துணைக் கொண்டு நிகழ்கின்றன. காண்போன், காணப்படு பொருள், காணுதல் எனும் மூன்று கூறுகள் மனபோதம் என்னும் ஒரே கூறாக அமைகின்றன. புத்தியின் உச்சநிலை அகண்டமாக விரிவடைகிறது. எது அகண்டமோ அதில் பல வஸ்த்துகள் இல்லை. ஒன்று தான் உள்ளது. அதுவே அத்வைத நிலையாகும். எப்பொழுதும் ஆகாரம் சுத்தமானால் அந்தக்கரணம் சுத்தமாகும். அந்தக்கரணம் சுத்தமானால் இறைவனின் நினைவு நிலை பெறும். அந்த நினைவு நிலை பெற்றாலே உடனே இவ்வுலகக் கட்டுக்கள் அனைத்தும் தளர்ந்து போகும். பேரம்பலத்தில் உள்ளதெல்லாம் சிற்றம்பலத்தின் அடக்கம். ஆனால் அவ்வித்தையால் அறிவிழந்தவர்கள் உள்ளத்திலே உறைந்துள்ள இவ் அரிய பொக்கிஷத்தை உணர்வதில்லையே என நாரதருக்கு சனக்குமாரரின் விடை மூலம் ஆத்ம ஞானம் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

பிரஜாபதி, விரோஜனன், இந்திரனுக்கிடையே இடம்பெற்ற உரையாடலைப் (அண்ணா,1957,pp.109-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

126). பார்க்கின்ற வேளையில் பிரஜாபதியிடம் அசுர குலத் தலைவன் விரோஜனனும் தேவர்களின் தலைவன் இந்திரனும் ஆன்மாவை அறியும் பொருட்டு செல்கின்றனர். இருவருக்கும் பிரஜாபதி சரீரமே ஆன்மா என உபதேசிக்கின்றார். இதனை ஏற்ற விரோஜனன் ஆத்மாவை உடம்பாக பூசிக்கிறான். இவ் உபதேசத்தை ஏற்க மறுத்த இந்திரன் மீண்டும் பிரஜாபதியிடம் கேட்டு அவர் காண்பது கண் அன்று. கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆன்மா. பேசுவது நாக்கு அன்று. நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவது ஆத்மா. கேட்பது காது அன்று. காதைக் கருவியாகக் கொண்டு கேட்பது ஆன்மா. எண்ணுவதும் ஆத்மாவே மனத்தையே கண்ணாகக் கொண்டு தியானத்தில் மூழ்கிப் பரமாத்மாவைக் கண்டு பரமானந்தம் அடைவதும் ஆத்மாவே சுருக்கமாச் சொன்னால் சரீரம் வேறு ஆன்மா வேறு எனக் கூறுகிறார்.

இவ்வாறு உபநிடதங்களிலே பௌதிகத்திற்கு கடந்த விடயங்களுக்கு காரண காரிய அடிப்படையில் கருத்தியலுக்கு முதன்மை கொடுத்து உரையாடப்பெற்ற பிரம்மம், ஆன்மா, உலகம், கன்ம மறுபிறப்பு, விடுதலை போன்ற விடயங்கள் பிற்கால தத்துவ வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன.

**உபநிடத உரையாடல்களும் பிற்கால தத்துவங்களும்**

உபநிடதத்திற்கு பிற்பட்ட காலங்களில் தோன்றிய இந்து தத்துவங்களுள் முதன்மையானதாக வேதாந்தமும், சைவசித்தாந்தமும் விளங்குகின்றன. அவற்றிற்குரிய அடிப்படையான கருத்துக்களை கருத்துமுதல்வாதத்தின் வழி அமைந்த உரையாடல் மூலம் உபநிடதங்கள் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றன.

உபநிடத மகாவாக்கியங்களே மூவகை வேதாந்தங்களுக்கும் வித்திட்டன. சங்கரரின் அத்வைதம் உபநிடதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏகம் சத், தத்துவமசி, அகம் பிரம்மம் அஸ்மி, அதாவது ஒரு பரம்பொருள் கொள்கையையே அத்வைத வேதாந்தமானது. சங்கரர் உபநிடதம் பற்றிய விளக்கத்தைத் தரும் போது 'அஞ்ஞான இருளைப் போக்கும் பிரம்ம ஞானம்' என்று குறிப்பிடுகின்றார். (லக்ஷ்மணன், 2005, p.328). உள்பொருளாகிய பிரம்மத்திற்கு நிற்குண, சற்குண நிலையைக் குறிப்பிட்டு உபநிடதம் விளக்கியது போல சங்கரரும் பிரம்மத்திற்கு நிற்குணம், சற்குணம் எனும் இரு நிலையைக் கொடுத்து நிற்குண பிரம்மத்திற்கே முக்கிய இடமளிக்கிறார்.

இராமானுஜரின் விஷ்டாத்வைதக் கோட்பாடும் உபநிடதங்களில் ஆராயப்பட்ட விடயங்களையே அடிப்படையாகக் கொண்டது. (கிருஷ்ணவேணி, 2008, p.31). பிரம்மத்தின் விசேட இயல்புகளாக ஆதியானது, அனைத்திற்கும் அடிப்படையானது, சொல்லால் விபரிக்க முடியாது, சத்தியம், ஞானம் முதலியன இதன் இயல்புகளாகும். அதனை இராமானுஜர் உபநிடதங்களின் அடிப்படையில் விளக்கி ஈஸ்வரனுக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பண்புகளாக அதாவது பிரம்மம் உண்மைப் பொருள், பரிபூரண குண பூரண அநாதியானவன், எங்கும் நிறைந்தவன், அந்தர்யாமி, அண்ட சராசரங்களை இயக்குபவன், எல்லாவற்றையும் மீண்டும் ஒடுக்குபவன் என இனங்காட்டினார்.

மத்துவரின் துவைதக் கோட்பாடு பிரம்மம், ஆன்மா பற்றிய சிந்தனைகள் உபநிடத உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டே எழுச்சி பெற்றன. (கிருஷ்ணவேணி, 2008, p.31) குறிப்பாக மூவகை வேதாந்திகளும் உபநிடதங்களுக்கு விளக்கவுரை எழுதியமையும் குறிப்பிடத்தக்கது. ஆன்மா தானே பிரம்மம் என அறிவதற்கும் பிரம்மத்தை அடைவதற்கும் தன்னைப் பீடித்துள்ள அவத்தை நீங்குவதற்கும் உபநிடதங்களில் குரு சீடனுக்கு ஞான மார்க்க நெறியினை எடுத்துக் கூறியமையை அடியொற்றி வேதாந்திகளும் சித்தாந்திகளும் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிவகைகளை எடுத்துக் கூறுகின்றனர். (சிவஞானபோதம், 8ஆம் சூத்திரம்).

சைவசித்தாந்தத்தில் பிரம்மம் பதி எனப் போற்றப்படுவதற்கும் அதற்கு தடத்த சொருப இலக்கணம் என இயல்புகள் அமையப் பெறுவதற்கும் உபநிடத உரையாடல்களும் விசாரனைகளும் அடிப்படையாக அமைந்தன. சைவசித்தாந்தம் உரையாடல்கள், விசாரணைகளின் வழி வந்த உபநிடத மகாவாக்கியங்களை ஏற்று தமது தத்துவக் கருத்துக்களைக் கூறுகின்றது(கிருஷ்ணவேணி, 2008, p.31).

இவ்வுபநிடதங்களில் காணப்படுகின்ற கருத்துக்கள் சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சியில் எவ்வகையில் இடம்பெற்றுள்ளது என்பதை மெய்கண்ட சாத்திரங்களின் மூலம் தெளிவாக அறிய முடிகின்றது. குறிப்பாக வேதாந்தமாகிய உபநிடதங்கள் முழுவதையும் அங்கீகரித்து வேதாந்த உண்மைகளை தெளிவு செய்வது சிவாகமமாகிய சித்தாந்தம் ஒன்றே ஆகும் என்பதனை உமாபதி சிவாச்சாரியார் தனது சிவப்பிரகாசப்பாடலிலே எடுத்துக்காட்டியுள்ளார்.

'பிரிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத்
தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்
தெரிக்கலுற்றான்'

(திருவிளங்கம், 1974, p.12)

உபநிடதங்கள் தத்துவமஷி – நீயே அது அதாவது நீயும் பிரம்மமும் ஒன்று என்கிறது. சைவசித்தாந்தம் இக்கருத்தை ஏற்றுக்கொள்கிறது. உபநிடதம் எடுத்தவுடன் நீயே அது என்றால் பாமர மக்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாது. அதனால் சித்தாந்தம் அறிவால் குறைந்த ஆன்மாக்களையும் பல வழிகளிலும் அழைத்துச் சென்று சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிகளைத் தாண்டிச் சென்று பரம்பொருளும் ஆன்மாவும் முக்தி நிலையில் இரும்பைக் காந்தம் அணைப்பது போலவும், தீயானது இரும்பை தன்வயமாக்கி வைத்திருப்பது போலவும், நீரோடு கலந்து உப்புப் போலவும் அத்துவிதமுறையில் கலந்திருக்குமென எடுத்தாள்கின்றது. (சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பாடல். 321.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேதாந்தம் உள்ளது ஒன்று என்ற கொள்கையை நிலை நாட்டும் பொருட்டு பிரம்மம் ஒன்றே உண்மைப் பொருள் என்று கூறுகின்றது. ஆனால் சித்தாந்தம் உள்ளது ஒன்று என்ற உபநிடத மகாவாக்கியத்திற்கு பிரம்மம் ஒன்று அதற்கு வேறாக பிரம்மம் இல்லை. ஆகவே பிரம்மம் என்ற வேறு ஒன்று இல்லை. ஏனைய பொருட்கள் இருக்கின்றன. அவை ஆன்மா, உலகம் என்பன. என முப்பொருள் உண்மையைக் கூறி உலகை ஆன்மா அனுபவிக்கச் செய்து இறுதியில் சிவத்தன்மையை ஆன்மா அடையும் நிலைக்குக் கொண்டு செல்கின்றது.

வேதாந்தம் அகம் பிரம்மாஷ்மி நானே பிரம்மம் என்கிறது. சித்தாந்தக் கொள்கைப்படி ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகின்றது.(லக்ஷ்மணன், 2005, p.393). சரீரத்தைச் சார்ந்து இருக்கும் போது சரீர வண்ணமாக இருக்கின்றது. பக்குவம் வந்த காலத்து பிரம்மத்தைச் சார்ந்து பிரம்ம வண்ணமாய் இருக்கின்றது. எப்படி சரீர வண்ணமாய் இருக்கும் போது சரீரம் ஆகாது ஆன்மா இருந்ததோ அதே போன்று பிரம்ம வண்ணமாய் இருக்கும் போது அது பிரம்மம் ஆகாது. இதுவே சித்தாந்திகளின் பாடல்களில் தெளிவாக்கப்படுகின்றது. (இருபா இருபஃது, 2003, p.257). வேதாந்தம் நானே பிரம்மம் என்று கூறுவதுடன் மாத்திரம் நின்று விடுகின்றது. நான் என்பது சரீரம் அன்று பிரம்மம் அன்று அது ஆன்மா இதனையே சித்தியார் 'கண்ட இவையின் மேல் நான் காரைத் கழிபரமும் நான்னல்லேன்'. (சிவஞானசித்தியார் (சுபக்கம்), 2010, பாடல். 298). என்று கூறுகின்றது.

உபநிடத உரையாடல்களில் ஆன்மா பற்றி குறிப்பிடுகின்ற போது ஞாக்கியவல்லியார் ஆத்மனின் இயல்பை 'நேதி நேதி இதுவன்று இதுவன்று' என எதிர் மறையில் குறிப்பிடுவதனை பிருகதாரணிய உபநிடதத்தில் காணலாம். (அண்ணா,1957,p.216). 'உடலில் நின்றும் இந்திரியங்களில் நின்றும் உடலில் செயல்களில் நின்றும் மரணத்தில் நின்றும் வேறான பொருளே ஆத்மா' என சாந்தோக்கிய உபநிடதம் குறிப்பிடுகின்றது. (அண்ணா,1957,pp.118-121). இதனை சிவஞானபோதம் மூன்றாம் சூத்திரம்

> 'இலது உலது என்றலின் எனதுடல்
> என்றலின் ஐம்புல ஒடுக்கம்........
> ....மாயா இயந்திரத் தனுவினுள்
> ஆன்மா' (சிவஞானசுவாமிகள், 1936, p.ஙகக)

எனக் குறிப்பிடுகின்றமை நோக்கத்தக்கது.

உபநிடதங்கள் ஐந்து வகையான கவசங்கள் பற்றிக் கூறுகின்றன. அதாவது அன்னமய கோஷம், பிராணமய கோஷம், மனோமய கோஷம், விஞ்ஞானமய கோஷம், ஆனந்தமய கோஷம் பற்றிக் கூறுகின்றதது (பொன்னையா, 2007, p.23). இதனையே சைவசித்தாந்தம் ஆன்மா ஐந்து வகையான கோஷங்களை உடையது. இவ் ஐவகைக் கோஷங்களோடு கூடிய நிலையில் சார்க்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்து அவத்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏற்படுகின்றது என்று கூறுகின்றது.(ஞானகுமாரன், 2012, p.47).

உருத்திரன் என்ற தெய்வத்தை விளக்கும் வகையில் கடவுள் பற்றிய முழு அம்சமும் சுவேதஸ்வர உபநிடத உரையாடல்களில் கூறப்பட்டுள்ளது. எல்லாத் திசைகளிலும் பார்வையை உடையவன், இவனுடைய கரங்கள் எங்கனும் அசையக் கூடியவை. அவனே ஆணும் பெண்ணும் நீரில் தீயில் தாவரத்தில் பழத்தில் எல்லாம் உறைகின்றான் என பல்வகையில் விளக்கப்பட்டுள்ளது. (பொன்னையா, 2007, p. 85-87). இதுவே சைவசித்தாந்தப் பதிக் கோட்பாட்டுக்கு முன்னோடியான கருத்துக்களாக விளங்குகின்றன. மேலும் சுவேதாஸ்வர உபநிடதத்தில் கடவுள் பசுபதி எனக் குறிப்பிடப்படுகின்றது. (பொன்னையா, 2007, p.111). இது சைவசித்தாந்த பதி பசு என்ற அடிப்படைக் கொள்கைக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. சுவேதாஸ்வர உபநிடதத்தில் வருகின்ற 'பாஷ' என்ற சொல் சைவசித்தாந்தம் கூறும் பாசத்திற்கான முன்னோடி ஆகும் என்ற வகையில் சைவசித்தாந்தம் கூறுகின்ற முப்பொருள் உண்மைக்கு சுவேதாஸ்வர உபநிடதம் அடிப்படைக் கருத்தை விளக்கியுள்ளது. (பொன்னையா, 2007, pp.88-91).

உபநிடதங்களில் இறைவன் பல்வேறு சக்திகளோடு தொடர்புபடுகின்ற அம்சம் முக்கியமாகக் குறிப்பிடப்டுகின்றது. (கந்தையா, 1998, p.52). இச்சக்தியின் தொடர்பு சைவசித்தாந்தத்தில் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

'தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும்
சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'
(ஸ்ரீ உமாபதி தேவநாயனார், 1953, p.4)
எனும் திருவருட்பயனுடைய பாடலடி உபநிடதங்களுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

உலகைக் குறித்து உபநிடத உரையாடல்களிலும் விசாரனைகளிலும் உலகம் பிரம்மத்தில் நின்று உண்மையில் வெளிப்பட்டது என்ற கருத்து தோன்றின. (லக்ஷ்மணன், 2005, p.56). இதனையே சிவஞானபோதம் '....தோற்றிய திதியே ஒடுங்கிமலத்துலதாம்......'
(சிவஞானபோதம், 1 ஆம் சூத்திரம்) என்கின்றது. இங்கு திதி என்பது உள்பொருள் என்பது பொருளாக அமைகின்றது.

பந்த நிலையில் பொருட்கள் பலவாகவும் முத்தி நிலையில் பொருள் ஒன்றாகவும் இருப்பது உபநிடதம் கண்ட உண்மை ஆகும். ஆன்மாக்களுக்கு இப்பொழுது உள்ள நிலை பந்த நிலை மாறுதல் அடைகின்ற நிலை அறிவு சுத்தமான அறிவு அன்று ஆன்மாக்களுக்குச் சீவத்துவம் போய் சிவத்துவம் பிறக்கும் நிலையில் நித்தியமான நிலை ஏற்படுகின்றது. அறிவு சுத்தமான அறிவாகும். முத்தி நிலையில் சீவன் தன்னை சிவனாய் காணும் இதனை 'யாவையும் சூனியம் சத்தெதிர் ஆதலின் .....' (வேங்கடாச்சலபதி, 1999, p.46) என சிவஞான போதம் கூறுகின்ற பாடலடியானது சிவத்திற்கு எதிரில் இரண்டாவது பொருள் எதுவும் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வகையில் பந்த நிலையில் பொருள் பலவாதலும் முக்தி நிலையில் பொருள் ஒன்றாதலும் எனும் உபநிடதம் கண்ட உண்மையினை ஐயுற்று வினாவிடை செய்து தெளிந்து கூறியதே சைவசித்தாந்தம் ஆகும்.

சுவேதாஸ்வர உபநிடதம் பக்தி பற்றி வற்புறுத்திக் கூறுகின்றது. குறிப்பாக ஞானத்தோடு பக்தியும் யோக நிலைக்குத் தேவை என்ற கருத்து வற்புறுத்தப்படுகின்றது. பக்தியானது கடவுளிடம் மட்டுமன்றி குருவிடமும் இருத்தல் வேண்டும் என்கிறது. (பொன்னையா, 2007, p.167). சைவசமய தத்துவத்திலே எல்லாப் பிரிவுகளும் குருவின் முக்கியத்துவத்தை வற்புறுத்தியிருப்பதற்கு மூலம் உபநிடதம் ஆகும். இறைவனே குரு வடிவமாக மானிட சட்டை தாங்கி எழுந்தருளி உயிர்களை எல்லாம் ஆட்கொண்டு அருளுகின்றான் என்பது சைவசித்தாந்தக் கொள்கை.(திருவருட்பயன், குறள் 5 - 8). எல்லாம் வல்ல சிவன் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் குரு வடிவம் கொண்டு மாணிக்கவாசகரை ஆட்கொண்ட திறத்தினை மெய்கண்ட தேவர்

> 'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
> தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தி விட்டு
> .............' (சிவஞானபோதம், 8 ஆம் சூத்திரம்)

என்று சிவஞானபோதத்தில் எட்டாம் சூத்திரத்தில் கூறியுள்ளார். திருவருட்பயன் 'அருளுரு நிலை ' என்னும் அதிகாரம், பக்தியானது கடவுளிடம் மட்டுமன்றி குருவிடமும் செலுத்த வேண்டும் என்னும் உபநிடதக் கொள்கையில் தெளிவாக அமைகின்றது. இவ்வகையில் உபநிடதங்கள் கூறுகின்ற தத்துவ சிந்தனைகள் பிற்பட்ட கால சைவசித்தாந்த மெய்கண்ட சாத்திரங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன எனலாம். மேலும் உபநிடதங்களில் உரையாடல்களின் வழி பெறப்பட்ட கன்மம், கன்மமறுபிறப்பு பற்றிய சிந்தனைகள் சைவசித்தாந்தத்தில் கன்மம் பற்றிய கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.
(சிவப்பிரகாசம்,பாடல்.29).

உபநிடதங்களே சாங்கியம், யோகம், மீமாம்சை, நியாயம், வைசேடியம் ஆகிய ஐவகைத் தரிசனங்களுக்கும் அடிப்படையாகின. (ஜெயமோகன், 2009. P.64). ஆத்மவாதிகளும் தமது கொள்கையை வலியுறுத்துவதற்காக உபநிடதங்களையே எடுத்தாள்வர்.

பிரஸ்த்தான திரயத்தில் ஒன்றாக விளங்கும் உபநிடதங்களின் விளக்க உரையாகவே பிரம்ம சூத்திரம் அமைய உபநிடத சாரமாக பகவத்கீதை அமைகிறது. உடல் வேறு ஆன்மா வேறு என்பதனை விளக்கும் வகையில் கட உபநிடத்தில் கூறப்பட்ட கருத்தை அதாவது வண்டியில் கட்டப்பட்ட குதிரை போல ஆன்மா உடலில் கட்டப்பட்டுள்ளது என்னும் கருத்தையே பிற்கால பகவத் கீதையில் கிருஷ்ணரால் கூறப்பட்டுள்ளது. உபநிடதங்களாகிய பசுக்களில் இருந்து பெறப்பட்ட பாலே பகவத்கீதை என இராதகிருஷ்ணர் கூறுவதும் கவனிக்கத்தக்கது.

பிற்கால அறிஞர்கள் பலர் தமது தத்துவக்கோட்பாடுகளை உபநிடதங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருந்தே கையாண்டுள்ளனர். உதாரணமாக இராஜராம் மோகன்ராய், ஜயானந்த சரஸ்வதி, விவேகானந்தர், காந்தி, பாரதி 'மண்ணும் உபநிடத நூல் எங்கள் நூலே' (சுந்தரமூர்த்தி, 2009, p.18). எனப் போற்றியுள்ளனர்.

முடிவுரை

எனவே உபநிடதத்திலே உரையாடல்கள் மூலம் கருத்துமுதல்வாத வழி அமைந்த பிரம்மம், ஆன்மா, உலகம், கன்ம மறுபிறப்பு முதலிய தத்துவங்கள் ஆராயப்பட்டுள்ளன. அந்த ஆராய்ச்சி செல்நெறியிலே பிற்காலத்தில் தத்துவங்கள் வளர்ச்சி அடைந்து கோட்பாட்டுத் தளத்திற்குச் செல்வதற்கு கருத்துமுதல்வாத உரையாடல்கள் அத்திவாரமாக அமைந்தன என்பதில் எந்தவித ஐயமும் இல்லை எனலாம்.

References

Iramanadhan, V. (2007). *Upanishadam pesum unmaikal.* Chennai: Sri Hindu Publication.

Suwami Asukoshanandhar, (2001). *Kado upanishadam.* Chennai: Sri iramakirichna madam.

Sundharam, P. (2002). *Kadopanisath.* Chennai: vanathi pathippakam.

Thiruvilangam, M. (urai). (1974). *Sivappirakasam.* Jaffna: koodduravu Tamil vitpanaik kalakam.

Sivajanasuwamikal, (1936). *Sivajanapodham.* Chennai: Saiva siddanta makasamaajam.

Sri Umapathuidhevanayanar, (1953). *Meikandasaaththiram.* Thiruvavaduthurai: thiruvavaduthurai aadhinam.

Vengadachchalapadhi, A. (1999). *Sivajanapodha urai.* Chennai: kalloori valakam.

Vethanathan, M. (pathippu). (2009). *Sivajanapodha sitturaiyum vilakkamum.* Jaffna: Saiva siddhanta aaivu niruvanam.

Nadaraja sivachchariyar, (2007). *Upanisadankalin saaram.* India: Narmatha pathippakam.

Kirushnaveni, A. N. (2008). *Saivasiddhantam oor arimukam.* Colombo: Semamadu pathippakam.

Ponnaiya, I. (urai). (2007). *Suvedasvaram (moolamum uraiyum).* Colombo – 12: kumaran puththaka ellam.

Anna (uraiyasiriyar), (1957). *upanidhathasaaram.* Chennai: sri ramakirushnamadam.

Kandhaiya, M. (1998). Saivasidhanta nokkil kailasapathi smiruthi. Sri lanka: university of Jaffna.

Thiruvilangam, M. (urai). (2010). *Sivajanasiththiyaar supakkam.* Jaffna: sivathondan sapai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Suntharamoorthi, I. (pathippu). (2009). *Parathiyar kavithaikal.* Chennai: paavai puplication.

Varatharajan, K. (2015). *India thaththuva tharisanam.* Chennai: barathi puththakaalayam.

Janakumaran, N. (2012). *Saiva siddhanta thelivu.* Jaffna: thoondi.

Thanabalasingam, S. (No year). *Upanidhatha sinthanaikal.* Jaffna: sanmukanaatha achchakam.

Vanamaamalai, N. (tamilakkam). (2008). *Uyirin thotram.* Chennai: new censari puk house.

Radhakrishnan, S. (1971). *Indian philosophy.* London: allen and unwin.

Ponnaiya, A. (2003). *Irupa irupakthu.* Chennai: saivasiddhanta nootpathippu kalakam.

Lakshmanan, K. (2005). *India thaththuva janam.* Chennai: palaniyappa pirathars.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம்

"உலக வரைபடத்திலுள்ள மூலை முடுக்குகளெல்லாம்
போக விரும்புகிறாயா? ஒரு நூலகத்திற்குச் செல்"
-டெஸ்கார்ட்ஸ்

"ஆயிரம் புத்தகங்களை வாசித்த ஒருவன் இருந்தால்
அவனைக் காட்டுங்கள் அவனே எனக்கு வழிகாட்டி"
-ஜூலியஸ் சீசர்

இவ்வாறு அறிஞர்கள் நூலகங்களினதும், நூல்களினதும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம். எனவே வாசிப்பு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாதது. குறிப்பாக மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அவசியமானது. ஒரு மாணவனின் சிந்தனை வளர்ச்சி, ஆராயும்திறன், கற்பனாசக்தி, ஞாபக சக்தி, தீர்மானம் எடுக்கும் திறன், முதலான ஆற்றல்களை வளர்ப்பதற்கு வாசிப்பானது அவசியமானது. ஆனால் இன்றைய சூழலில் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகிக்கொண்டு செல்வதைக் காணலாம். அந்தவகையில் இக்கட்டுரையானது பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வாசிப்பின் நிலை எத்தகையது, அவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் எவ்வாறான தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் விளக்குவதாக அமைகிறது.

இன்றைய சூழலில் பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு தொடக்கம் சிரேஷ்ட பிரிவு வரை கற்கும் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குன்றியே காணப்படுகிறது. ஆரம்பப்பிரிவு மாணவர்கள் வீட்டில் தொலைக்காட்சியில் கேலிச்சித்திரங்கள் பார்ப்பதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். அதேபோன்று கையடக்கத் தொலைபேசியில் விளையாட்டுக்களில் ஈடுபடுவதையும் காணலாம். இதனால் இங்கு வாசிப்பு என்பது ஆரம்பப்பிரவு மாணவர்கள் மத்தியில் குறைவடைந்து செல்வது கவலைக்குரிய விடயமாகும்.

இவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் பெற்றோர்களே அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு சுவாரசியமான சிறிய கதைகள் கொண்ட புத்தகங்களையோ, அல்லது படங்கள் எழுத்துக்களுடன்கூடிய புத்தகங்களையோ பெற்றுக்கொடுக்க வேண்டும். வார இறுதி நாட்களிலோ, அல்லது ஒன்று அல்லது இரண்டு தடவைகளோ நூலகங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நூலகங்களில் சிறுவர் பகுதிகளில் காணப்படும் புத்தகங்களை இரவல் பெற்றுக்கொடுக்க வேண்டும். இதனூடாக ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த முடியும். இவ்வாறு ஏற்படுத்துவதனூடாக அவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும்.

இன்றைய சூழலில் கனிஷ்ட, மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் மத்தியிலும் வாசிப்புப் பழக்கம் அருகிய நிலையிலேயே காணப்படுகிறது. இதற்கு காரணங்களாக கையடக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொலைபேசியில் குறுஞ்செய்தி அனுப்புதல், நீண்டநேர தேவையற்ற உரையாடல், விடுமுறை நாட்கள் முழுவதையும் நண்பர்களோடு களியாட்டங்களில் கழித்தல் போன்றவற்றை குறிப்பிடலாம். ஆகையால் மாணவர்கள் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாசிப்பதை விரும்புவதில்லை.

இதனை தவிர்ப்பதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக பெற்றோர்கள் மாணவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரம் கற்றல் தொடர்பான விடயங்களுக்கு மாத்திரம் கையடக்கத் தொலைபேசி பாவனையை வழங்கத் தீர்மானிக்க வேண்டும் உதாரணமாக கணிதச் செய்கைகள், முக்கியமான மற்றும் உடனடிச் செய்திகளை அறிதல், இணையத்தள தேடல்கள் என்பவற்றிக்கு வழங்க வேண்டும். ஏனைய நேரங்களில் புத்தகங்களின் வாசிப்பிற்கு வழி வகுக்க வேண்டும். அவர்களின் பாடங்களுடன் தொடர்புடைய புத்தகங்கள், கட்டுரைகள் அடங்கிய சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள் என்பவற்றை அவர்களது படிக்கை அறையிலோ அல்லது படுக்கை அறையிலோ வைத்து வாசிப்பதற்குரிய சூழலை உருவாக்க வேண்டும்.

அதேபோன்று ஆசிரியர்களும் சில புத்தகங்களை வாசிக்குமாறு மாணவர்களைத் தூண்ட வேண்டும். மாணவர்களுக்கு கற்பிக்கப்படாத பாடவேளைகளில் நூலகங்களுக்கு அனுப்பி வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட வேண்டும். குறிப்பாக சிரேஷ்ட பிரிவு மாணவர்களை பாடப்பரப்புடன் தொடர்புடைய வகையில் தலைப்புக்களை வழங்கி நூல்களைத் தேடி வாசித்து தலைப்புக்கான விடயங்களைத் சேகரிக்க வேண்டும். இதனூடாக மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் வளர்க்கப்படும். பெரும்பாலான மாணவர்கள் தங்களது பிறந்த தினத்தை தனது பாடசாலை மாணவர்களோடு மகிழ்ச்சியாக வெளிப்படுத்துவார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏதேனும் புத்தகம் ஒன்றை பாடசாலை நூலகத்திற்கு வழங்குமாறு பணிக்க வேண்டும். அத்தோடு பரிசளிப்பு விழாவின்போது மாணவர்களுக்கு கணிசமான அளவில் புத்தகங்களை வழங்குவதனூடாகவும் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு புத்தகத்தை ஒவ்வொரு மாணவர் வீதம் வழங்கி அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை சுருக்கமாக கூறுமாறு கூறுவதனூடாக கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட முடியும்.

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிக மிகக் குறைவடைந்து காணப்படும் நிலையை தற்போது காணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் கையடக்கத் தொலைபேசி பாவனை, போதைவஸ்திற்கு அடிமையாதல், பொழுதுபோக்குக் களியாட்டங்கள் என்பன அவர்களின் வாசிப்புப் பழக்கத்தை தொலை தூரத்திற்குக் கொண்டு சென்றுள்ளது. அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பீடுகளில் பெரும்பாலானவை இணையத்தின் குறிப்பாக Googleஇல் இருந்து பெறப்பட்டு அவற்றை அவ்வாறே பிரதி செய்து வெளிப்படுத்துவதாகவே அமைகிறது.

இணையத்தளமும் ஒரு வாசிப்புப் சாதனமாகும். ஆனால் இணையத்தளக் குறிப்புக்களை அவ்வாறே பிரதி பலிப்பது சிறப்பானதன்று. அதனை வாசித்து மாணவர்கள் விளங்கிக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தங்களது மொழிநடையில் பிரதிபலிப்பதனூடாக அவர்களது வாசிப்புப் பழக்கம் இணையத்தளத்தினூடாக வளர்க்கப்படுவதைக் காணலாம். ஆனால் இன்று பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் வாசிப்பதையே சோம்பலாக நினைப்பது வழக்கமாக மாறிவருகிறது.

இதனை நிவர்த்தி செய்வதில் விரிவுரையாளர்களின் பங்கு செயற்கரியது. அந்தவகையில் விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும் நூலகங்களுக்கும் அல்லது நூல்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக விரிவுரைகளின்போது குறிப்புக்கள் வழங்குவதை குறைத்தல், அளிக்கை முறைகளைப் பயன்படுத்துமாறு கூறுதல், துறைகளுக்குத் துறை நூலகங்களைக் உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதனூடாக பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட முடியும்.

இவ்வாறு பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வாசிப்பு இன்றியமையாதது. அவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோர் சிறந்த தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். அந்தவகையில் ஒவ்வொரு வருடத்திலும் வரும் ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை வாசிப்பின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றது. இம்மாதத்தில் பாடசாலை, பல்கலைக்கழகங்கள், மற்றும் சமூக நிறுவனங்கள் வாசிப்புடன் தொடர்புடைய பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், குறுநாடகங்கள், கவிதைப் போட்டிகள், மொழிபெயர்ப்பு நூல்கள் தொடர்பான ஆக்கங்கள் முதலானவற்றை முன்னெடுப்பதனூடாக மாணவர்கள் மத்தியில் வாசிப்பு பற்றிய எண்ணக்கருவை வளர்ப்பதோடு வாசிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்த்த முடியும். இது எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கு ஒரு வழிகோலியாக அமையும். இதன் மூலம் மாணவர்களின் அறிவு, திறன், சிந்தனையாற்றல், எழுத்தாற்றல் என்பவற்றை வளர்த்துக்கொள்ள முடியும்.

“நல்லன கற்று நலம் பெறுவதற்கு நமக்கென கிடைத்த அரும் பெரும் பொக்கிசம் நூல்கள் ”
.

**சி. ஓசாநிதி**

**தற்காலிக உதவி விரிவுரையாளர்**

**கிழக்குப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புலமை நலம் பெறுவோம்

வித்தகர், விற்பன்னர் யாவரும்
வியந்தே போற்றிடும் எம் நூலகம்!
நித்தில அறிவை நித்தமும் வாரி – வழங்கிடும்
நிர்மல ஞான நல் ஆலயம்!

முத்தமிழ் முனிவர் உதித்த நிலம்!
முத்தான கலைவளம் சொரி(யும்) நிலம்!
உத்தமப் பெரியோர் உறையும் நிலம் - ஈண்டு!
உண்மை ஒளி சிந்துமே எம் நூலகம்!

திசைரியோடு, பல் சஞ்சிகை மலர்களும்
திரட்டியே நல்கிடும் அரியதோர் படிப்பகம்
மனவளம், மனைவளம் கூட்டிடு வண்ணம்
மறையொளி சிந்தும் பன்நூறு பபறுவல்களின் சேகரம்

விஞ்ஞானம், அரசியல் சமூகவியல் இன்றும்
வியன்மிடும் இலக்கியம் நவீனங்கள் அகராதி
மெய்ஞ்ஞானம் வரலாறு மெய்யியல் ஆன்மீகம்
மிடுக்குடை தலைவர்தம் சரிதமொன்றே நூல்களின் தோட்டம்

கச்சிதமாய்(க்) கணினி மயப்படுத்தி இன்று
கண்கவரும் நேர்த்தி நிறை சேவையினால்,
உச்சபலன் ஊட்டித்தன் வாசகர்தம்
உளம் நிறைந்து மிளிர்கின்றாள் நூலகநங்கை!

அர்ப்பணித்துப் பணியாற்றும் “பவளம்” மற்று
ஆர்வ மிக இன்முகத்தோடேதம் பணி தொடுக்கும் ஊழியரும்
நற்பணியால் மட்டு மண்ணில் ஞானப்பயிர் வழர்கின்றார் வாழி
நாம் தினமும் ஏகிச் சென்றே புலமைநலம் பெறுவோம்!

ஆக்கம். முறையூர். சசிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுவாசத்தின் வாசிப்பு

நூல்களை வாசியுங்கள்
வாசிப்பை நேசியுங்கள்
நேசிப்பை சுவாசியுங்கள்
சுவாசம் உங்களை
உயர்த்தும் உன்னதமாக்கும்

சீர்மை நிறை கொள்கைகள்
செம்மையான பழக்கங்கள்
நேர்மை தரும் குணத்தோடு
வாழலாம் வழியும் காட்டலாம்

வேதாந்தமும் சித்தாந்தமும்
வகை கூறும்
விஞ்ஞானமும் மெய்ஞானமும்
விளையாடும்
ஆதிகாலம் ஆளை மிரட்டும்
ஆழ்ந்து பாருங்க்ள வாசிப்பில்
கதையா? கட்டுரையா?
நிஜமா? கற்பனையா?
அறிவுசார் கருத்துக்களா?
அமுதமெனக் கவிதைகளா?
தேடுங்கள் நூலகக் கடலில்
முத்துச் சிப்பிகள் எழுதும்
முகவுரை சுற்றுகின்ற உலகத்தை
நாம் சுற்ற வேண்டாம்
நடப்புகள் நாடி வரும்
காலடியில
நாம் இருந்தால் நூலடியில்

ருத்ரநாயகி பத்மராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காலன் விடு தூது

விதைச்சி வைச்ச பல ஜென்மம்
விதிகளையும் நேரமாச்சே...
விதியறுக்க நான் வருவேன்
சேதியொறு நாள் வைச்சே

பாவமொரு மூட்டை கட்டு...
அதில் புண்ணியமும் வேறுகட்டு...
படியளக்க நான் வருவேன்...
பாதிவழியுமதில் சொல்வேன்...

கொலை களவின் காதலரோ?
கொடுமாட்சி கொண்டவரோ...?
சாதி வெறி உண்டவரோ...?
சாயும் மாந்தர் உயிர் ரசித்தவரோ?

பெண்ணடக்கி வாழ்ந்தவரோ...?
வாழும் பெண்மானம் களைந்தவரோ...?
தன்மானம் தனை மறந்தே...?
மூடும் உடல் விற்று வாழ்ந்தவொரோ...?

பிறர் போகம் சுவைத்தவரோ...?
தாயின் மென்னுணர்வை சிதைத்தவரோ...?
ஐந்தறிவை வதைத்தவரோ...?
நான்கும் மிதித்து வழி நடந்தவரோ...?

வஞ்சனையில் நெஞ்சணைத்து
பஞ்சணையில் வாழ்ந்தவரோ...?
பஞ்சணையில் நெஞ்சணைக்கா
தினம் நொந்து வெந்தவரோ...?

நல்வினைதான் விழி மறைக்க
தீவினையில் பூப்பவரோ...?
பூத்த மலர் போல் சிதைவை
திசை குலைய செய்தவரோ...?

அவன் தலைவி...
அவன் தலைவன்...
ஆசை மோகம் கொண்டவரோ...?
ஆசை மோகம் கொண்டதனில்...
கற்பதனை களைந்தவரோ...?

தீவினைகள் மிதித்தெழுந்து
நல்வினையில் பூத்தவரோ...?
ஏழைத்துயர் கண்டெழுந்து
தர்மவழி வாழ்ந்தவரோ...?

ஐந்தறிவில் ஆறறிவில்
நேச மொழி கொண்டவரோ...?
நேசமொழி கொண்டதனில்
பிறர் நெஞ்சம் ஈர்த்தவரோ...?


பெண்மையதில் சிந்தையதில்
தேவி முகம் கண்டவரோ...?
ஆண்மையதும் பேசுகையில்
நல்மனதும் கொண்டவளோ...?

ஆட்சியதில் துட்சியது
தினம் தாழ வாழ்ந்தவரோ...?
தினம் துட்சி தாழுகையில்
நல்லாட்சி விதைத்தவரோ...?

மழலை மொழி தினம் பயின்று
கவலை மொழி மறந்தவரோ...?
கவலை மொழி மறந்தங்கே
வாழ்வதனை ரசித்தவரோ...?

அத்தனையும் சித்தமதில்
மொத்த வழி நானுரைக்க
படியோடு நானளப்பேன்
உன்விதியும் அறுக்கையிலே...

**கவிஞர் வியன்சீர் ராகுல்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர்களும் வாசிகசாலையும்

கௌசிகன் பிரியசங்கரி

'கற்கக் கசடறக் கற்றபின் நிற்க அதற்குதக' என வள்ளுவர் கூறியுள்ளதையும், சீனா சென்றேனும் கல்வியை கல் என ஒரு மகான் கூறியுள்ளதையும், கல்வியை போலொரு செல்வமுளதோ என கவிஞன் பாடியிருப்பதையும் நாமறிவோம். கற்காதவன் பாதி மனிதனென்றும் கற்றவனே முழு மனிதனாக கணிக்கப்படுகிறான்.

'கசறுஅற' என வள்ளுவர் அழுத்திக்கூறி இருப்பதை ஆராய்ந்தால் எவ்வித குறைபாடுகளுமின்றி கற்கவேண்டும். பிழை இல்லாமல் சரியான கருத்தறிந்து பொருளறிந்து கற்க வேண்டும். இப்படிப் பற்பல அர்த்தங்களை அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவமணிகள் வெறும் ஏட்டுக்கல்வியை மட்டும் படித்து புத்தகப்பூச்சிகளாக இல்லாமல் பரந்த அறிவை பெறுவதற்கு நூலகமும் பெரும் பங்காற்றுகின்றது. கல்வி கற்பது இறைவனை சென்றடைவதற்கே என ஆறுமுகநாவலர் திருவாய் மலர்ந்துள்ளார். உண்மை இப்படிஇருந்தாலும், தற்போது புதிய புதிய வியாக்கியானங்கள் சொல்ல வேண்டிய சூழலுக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதாவது கல்வி கற்பது அறிவை பெருக்கிக் கொண்டு ஒரு கல்வி மானாக, ஒரு பேராசிரியராக, ஒரு பட்டதாரியாக என்ற சிந்தனையும் கல்வியால் தன்தகுதியை உயர்த்தி பொருளாதாரத்தில் உயரவும் வாழ்வை வளப்படுத்தவும் ஒரு வேலை வாய்ப்பைப் பெறவும் இப்படி இன்னோரன்ன விதமாக பல பரிமாணங்களை இப்போது கல்வி கற்றல் பெறுகின்றது.

இன்று கல்வி கற்றுத் தேருவோர்களின் எண்ணிக்கை விரிவடைந்து கொண்டு போவதால் போட்டி நிலைமை உருவாகி உள்ளது. எனவே படித்தவர்களுக்கெல்லாம் வேலை என்ற நிலைமை இல்லை. படித்து தேறியவர்களில் பொது அறிவு உள்ளவர் யார் விவேகி யார் உலக நடப்பு விவகாரங்கள் நாட்டின் நிர்வாக கட்டமைப்புக்கள் இப்படியே பள்ளிப் படிப்போடு சம்பந்தப்படாத விவகாரங்களையும் அறிந்திருக்க வேண்டிய கட்டாயத்துக்கு மாணவர்களும் பதவி உயர்வை நாடி நிற்பவர்களும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

எனவே இப்படியான அறிவை வாசிகசாலைகளில் பெறலாம். நூலகம் என்ற பெயர் கொண்ட வாசிகசாலை மிகமிக பயன்மிக்க ஒரு இடமாகும். பத்திரிகைகள் சஞ்சிகைகளை வாங்கிபடிக்க வசதி அற்றவர்கள் எல்லோருக்கும் உதவக்கூடிய இடமாக அறிவுக் கருவூலமாக திகழும் இடம் வாசிகசாலையாகும்.

பற்றாக்குறையான வாழ்க்கை சூழலில் சிறிது வசதி உள்ளோர் ஒரு பத்திரிகைக்கு மட்டும் சந்தாக்கட்டி எடுத்துப்படித்து வரமுடியும். ஆனால் வசதியற்றவர்களும், மாணவர்களும், பல்வேறு விதமான பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் நிரம்பி வழியும் வாசிகசாலையை பயன்படுத்தலாம்.

மக்களின் நன்மை கருதி அரசாங்கமும் நகரசபைகளும் கிராம சபைகளும் இடத்துக்கிடம் நூலக வசதிகளை செய்து கொடுத்திருந்தாலும் அதை பயன்படுத்துவோர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். நாட்டில் சர்வதேசத்தின் என்ன என்ன மாற்றங்கள் எங்கெங்கு புதிய புதிய சம்பவங்கள் அதிசயங்கள் பிரச்சனைகள் நடக்கின்றன என்பதை அறிந்து கொள்ளவேண்டிய ஆர்வம் ஆவல் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும். குறிப்பாக வருங்கால சந்ததியினரை பிரதிநிதித்துவப்படுத்த இருக்கின்ற மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். இப்பயன்களை தரக்கூடிய இடமாக வாசிகசாலை திகழ்வதால் அதை நல்லமுறையில் பயன்படுத்தி பலன் பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாசித்ததில் நேசித்தது.....

**திருமதி.நேசராணி ஹரிதாஸ்**

- புத்தகங்களும் நண்பர்களும் குறைவாக இருந்தாலும் நல்லவையாக இருக்கட்டும்.
- புத்தகம் நம் மௌன நண்பன்.
- நமது நன்மையான நண்பர்கள் யார் தெரியுமா? புத்தகங்கள்.
- உன்னத நூல்களின் சிறப்புப் பற்றி சொல்வதைவிட அதனை படிப்பதற்கு ஆர்வத்தை தூண்டுவதே நல்லது.
- ஒரு நல்ல புத்தகத்தை படிக்கும் போது ஒரு புதிய நண்பனை அடைந்தது போல் இருக்கும் அதனை இரண்டாவது முறை படித்தால் பழைய நண்பனை சந்தித்தது போன்று ஆனந்தத்தை கொடுக்கும்.
- கல்வி கற்பதைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது.
- நுல்ல நண்பனை தேடும்முன் புத்தகங்களைத் தேடிக் கொள்வது நல்லது.
- புத்தகம் என்பது வாய் திறக்காத சொற்பொழிவாளர் மௌனம் வகிக்கும் மகாகவி தனிமையை தூரமாக்கும் நண்பன். மற்றொரு உலகுக்கு அழைத்து செல்லும் சிம்ம சொற்பணம்.
- புத்தகம் இல்லாத வீடு உயிர் இல்லாத உடலை போலாகும்.
- ஒரு நூல் இதயத்தில் இருந்து வெளிவந்திருந்தால் அது மற்ற
- இதயங்களுக்குள் புகுவதற்கு வழி செய்து கொள்ளும்.
- படிப்பவன் புத்தகத்தை மூலையில் போட்டால் என்றால் அது எழுதியவனில் தவறேயாகுமே தவிர படித்தவனின் தவறு அல்ல.
- கற்ற கல்வி வித்தைகளை மற்றவனுக்கு புகட்டவில்லை எனில் கற்றறிந்ததும் விழி இழந்தவனுக்கு சமம்.
- ஆசிரியர்களின் வேலை சிறுவர்களுக்கு பயிற்றுவது அன்று அவர்களுக்குப் படிப்பில் பிரியம் உண்டாக்குவதே.
- ஒரு நல்ல புத்தகத்தின் சிறப்பை எழுதிக்கொண்டே போனால் அதற்குக் கடைசி பக்கமே கிடையாது.
- பட்டு நூல்களால் வண்ணமான ஆடைகளை பெறலாம் பயன்மிகு நூல்களால் திண்ணமான வாழ்வைப் பெறலாம்.
- பல புத்தகங்களைப் படிப்பதனால் ஒரு மனிதன் அறிவாளியாகவே இருக்க வேண்டும் என்பது நிச்சயம் இல்லை. சில புத்தகங்களை நல்ல முறையில் படிப்பதே ஒருவனை அறிவாளியாக்கின்றது.
- கல்வி எங்கு நுழைகின்றதோ அங்கு அறியாமை அகல்கிறது.
- நினைவே அறிவின் தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாம் எங்கே போகின்றோம்?

திருமதி. கலா மகேந்திரராஜா

நாகரீகத்தில் முன்னேற்றமடைந்து விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்று எல்லாவற்றிலும் உயர்ந்து நிற்கும் மனித குலம் பண்பிலும் சமூக அக்கறையிலும் வேகமாகப் பின்னோக்கிப் போவது யாவருக்கும் வேதனை தரும் விடயம்தான். இது பற்றித் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம். உயர்கல்வி, தொழிற்கல்வி எனப் போட்டி போட்டுக் கற்கும் எம்பிள்ளைகள் உயர்பதவி பெற வேண்டும். என எதிர்பார்க்கும் நாம் அவர்கள் நேர்மையான, அன்பான, சமூக அக்கறையுள்ளவர்களாக வாழ வேண்டுமென்று நினைப்பதுமில்லை. அவை பற்றி அறிவுரை கூறி வளர்க்கத் தவறிவிடுகின்றோம். பிள்ளைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் பெற்றோர்களாக வாழவும் முயற்சி எடுப்பதில்லை. பெற்றோர் மட்டுமல்லாது பாடசாலைகளும் தொண்டு நிறுவனங்களும் ஒழுக்கம், பண்பாடு பற்றிய விடயங்களில் அதிக அக்கறை எடுக்க வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் "நான்" "என் குடும்பம்" எனச் சிறு சிறுவட்டங்களுக்குள் எமது சகல நடவடிக்கைகளையும் சுருக்கி விட்டோம். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்றவையும் திருக்குறளும் காட்டி வந்த பாதைகள் மூடப்பட்டு விட்டன. பாடப்புத்தகத்தில் அவற்றைப் படித்தாலும் புள்ளிகளை அதிகரிக்கும் நோக்கத்துடனே படிக்கிறார்களே தவிர வாழ்க்கையில் நீதி, தர்மம் என்பவற்றில் நம்பிக்கை கொள்ளவும் எவ்வித இடர்கள் வந்தபோதும் மனம் தளராமல் நல்ல கொள்கைகளுடன் வாழும் வாழ்வே உயர்வானது என்ற உறுதியுடன் வாழ முயற்சிக்கின்றோமா?
நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழாமல் நல்லவனாகவும் வல்லவனாகவும் நடித்துப் பிறரை ஏமாற்றவும் புகழுக்காக ஏங்கவும், அது கிடைக்காத சந்தர்ப்பத்தில் மனம் புழுங்கிச் சோர்ந்து விடுகின்றோமே.

உலகில் யாவரும் சமம் எனக் கூறப்பட்டாலும் ஒருவரோடு உரையாடும் போது அவரது கல்வி, பதவி, தகுதி என்பவற்றை மனதில் கொண்டே அவருடன் உரையாடுகின்றோம். எனவே நாம் மனிதனை மதிப்பதை விட பதவி பணத்தையே உயர்வாக எடை போடுகின்றோம். எச்செயலை செய்வது பாவம் என்று விலக்கப்பட்டதோ அச்செயலை இரகசியமாகச் செய்வது புத்திசாலித்தனம் என்று நினைக்கின்றோம். அதன் வினைப்பயன் எம்மைப் பழிவாங்கும் என்பதை உணர மறுக்கின்றோம். இதுவே திருவள்ளுவர் தெளிவாகச் சொல்கிறார்.

"எனைப்பகை உற்றாரும் உய்வன் வினைப்பகை வீயாது அடியுறைந்தற்று" எப்படியாவது வாழலாம் என்ற கருத்திலிருந்து மாறுபட்டு இப்படித்தான் வாழ வேண்டும். என்ற நல்ல விழுமியங்களுடன் நல்ல கொள்கைகளுடனும் வாழ்ந்தால் இவ்வுலகம் அமைதியான சொர்க்கமாகிவிடும்.

தினமும் நீராடி உடலைத் தூய்மைப்படுத்த சவர்க்காரம் உதவுவது போல எம் உள்ளத்தில் எழும் தவறான எண்ணங்கள் நல்ல நூல்களைப் படிப்பதால் அகன்று விடுகின்றன. தினமும் ஒரு நல்ல நூலின் ஒரு பகுதியையாவது வாசிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் நம்மையறியாமலே நாம் பல துறைகளிலும் பரந்த அறிவைப் பெறக்கூடியதாக இருக்கும்.

எனவே எமது குழந்தைகளுக்கும் சிறுவயதிலிருந்தே நல்ல நூல்களை வாசிக்கும் ஆர்வத்தை கூட்டுவதும் அவர்களை நன்நெறியில் உலகிற்கு உபயோகமான மனிதனாக வாழ வைப்பதும் நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

ஒரு நூலகத்தைத் திறப்பதன் மூலம் பல சிறைச்சாலைகளை மூடக்கூடியதாக இருக்கும். தற்போது சிறைச்சாலையில் உள்ளவர்களின் தொகைதான் அதிகரித்துக் கொண்டு வருவதும் நூலகத்தில் சேர்ந்து பயன் பெறுவோர் எண்ணிக்கை குறைந்து கொண்டு போவதும் வேதனை தரும் விடயமாக இருக்கின்றது.

எனவே எமது சமூகம் மனிதத்தன்மையுடன் சமூகத்துடன் இணைந்து நற்பிரசையாக வாழ வேண்டுமாயின் ஒவ்வொரு வீட்டாரும் நூல் நிலைய அங்கத்துவம் பெற்று அறிவையும் பண்பையும் மேம்படுத்துவது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பின் மகிடி நாடகம் ~ ஓர் அறிமுகம்

கலாநிதி.சி.மௌனகுரு

இலங்கையில் தமிழர் பாரம்பரியமாக வாழ்கின்ற பிரதேசங்களுள் மட்டக்களப்பு பிரதேசமும் ஒன்று. தனக்கெனத் தனித்துவமான சமூக அமைப்பினையும், பண்பாட்டு சங்கங்களையும் இது கொண்டுள்ளது. தமிழ் நாட்டிலிருந்து இது மிகத் தொலைவில் அமைந்திருப்பதும், ஆகம வழிபாட்டு அம்சங்கள் இங்கு அதிகளவு அறிமுகமாகாமலிருப்பதும் மிஷனறிமார்களின் ஆங்கிலக்கல்வி மயமாக்கல் இங்கு அதிகளவு செயற்படாமையும், நவீனவர்க்கம் இங்கு பெரியளவில் உருவாகாமையும் இத்தனித்துவம் பேணப்படுவதற்கான காரணங்களாகும்.

ஓர் இனத்தின் புராதன பண்பாடுகளை அறிய விரும்பும் மானிடவியலாளர், அவ்வினத்தின் பின் தங்கிய பிரதேசங்களையும் புராதன மனிதக் குழுக்களையும் நாடுவர். இவ்வகையில் ஈழத்தமிழரின் புராதன பண்பாடுகளையும், தனித்துவம் மிக்க கலாசார அம்சங்களையும் ஆராய விரும்பும் ஆராய்வாளருக்கு மட்டக்களப்பு ஒரு முக்கிய களப் பிரதேசமாகும். தமிழர் வாழ்கின்ற வட பிரதேசம் வரலாற்றுப் போக்கில் பல்வேறு கலாசார மாற்றங்களுக்குட்பட்டு விட்டதனால் தமிழரின் புராதன பண்பாட்டு அம்சங்களை மூலவடிவில் இங்கு காண்பது மிக அருந்தலாக உள்ளது. இந்நிலையில் மட்டக்களப்புப் பிரதேசம் தமிழர் கலாசார ஆய்விற்குரிய பிரதேசமாக மாறுதல் இயல்பே.

## மகிடி நாடகம்

இப்பகுதியின் பண்பாட்டு அம்சங்களாக திகழ்வனவற்றுள் முக்கிய கவனம் பெற வேண்டியவை இப்பகுதியில் நிகழும் மரபு வழி நாடகங்களாகும். மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடி, வசந்தன் நாடகங்கள் பற்றி அறிஞர்களும், ஆர்வலர்களும் நிறைய எழுதியுள்ளனர். அவை மட்டக்களப்புக்கு வெளியே பிரபல்யமாகியுள்ளன. ஆனால் இதுவரை அறிஞர்களால் அறிமுகப்படுத்தப்படாமலும் இன்றும் அருந்தலாக வழக்கில் இருப்பதுமான ஒரு நாடகம் மட்டக்களப்பில் உண்டு. அதுவே மகிடிநாடகம் ஆகும். இதனை இப்பிரதேச மக்கள் மகிடிக்கூத்து என்றும் அழைப்பர். இந்நாடகம் சமயச்சடங்குகளினின்று விடுபட்டதும் அதே நேரம் மட்டக்களப்பில் இந்து மத சமயச் சடங்குகளிற் பயன்படுத்தப்படும் வணக்கமுறைகள், கிரியை முறைகள், தாள வாத்தியங்கள் பயன்படுத்தப்படுவதுமான நாடகமாகும். இவ்வகையில் பெரு வளர்ச்சி பெற்ற வடமோடி, தென்மோடிக் கூத்துகளுக்கு இடைப்பட்ட ஒரு நாடக வடிவம் இதேபோல் அமைந்த கோலம், சொக்கரி போன்ற நாடகங்கள் சிங்கள மக்கள் மத்தியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மகிடி என்ற சொல்லுக்கு பல கருத்துக்கள் உண்டு. மந்திர தந்திரங்களைக் காட்டும் விளையாட்டு என்ற ஒரு அர்த்தமும் அதற்கு உண்டு. இம்மகிடிக்கூத்தில் பெரும் இடத்தைப் பிடிப்பது அதுவே.
மட்டக்களப்பு மந்திரத்துக்குப் பெயர் போனது என்ற ஒரு ஐதீகம் உண்டு. இங்கு முன்பிலிருந்து மந்திரவாதிகள் பற்றியும் அவர்களின் திறமைகள் பற்றியும் வாய்மொழிக்கதைகள் பல வழங்கியுள்ளன. எனவே அப்பிரதேசத்திற்குரிய நாடகம் இப்பண்புகளைக் கொண்டிருத்தல் இயல்பு. இவ்வகையில் மட்டக்களப்பின் புராதன பண்பாட்டின் ஓர் அம்சத்தை பிரதிபலிக்கும் நாடகம் இது எனலாம்.

## மூவகை மகிடிக்கூத்துக்கள்

இம் மகிடிக்கூத்து சித்திரை வருடப்பிறப்பன்றோ அல்லது வருடப்பிறப்பின் பின்னர் அதனை அண்மித்த நாளிலோ ஆடப்படுகின்றது. மூன்று வகையான மகிடிக்கூத்துக்கள் மட்டக்களப்பில் வழக்கிலுள்ளன.

1. முதலாவது வகை மகிடிக்கூத்தில் மலையாள நாட்டிலிருந்து வரும் ஒண்டிப்புளியும் அவன் மனைவி காமாட்சியும் தமது கூட்டத்தாருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மட்டக்களப்புக்கு வந்து அங்கு வாழ்ந்த மந்திரவாதியுடன் போட்டியிட்டு வென்று அப்பிரதேசத்தில் குடியேறியமை நிகழ்த்திக்காட்டப்படுகிறது.

2. இரண்டாவது வகை மகிடிக்கூத்தில் கதை அம்சம் அதிகம் இல்லை. மந்திரவேலைகள் நடைபெறுகின்ற மகிடியினை வேடன், வேடுவிச்சி, வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி ஆகியோர் பார்க்க வருவது இதில் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது.

3. மூன்றாவது வகை மகிடிக்கூத்து முதலிரண்டு மகிடிக்கூத்துக்களையும் விட வித்தியாசமானது. இதிலும் மந்திர தந்திர விளையாட்டுக்கள் இருப்பினும் கம்ப காமாட்சி, மீனாட்சி, வசிட்டர் ஆகியோர் சம்பந்தமான கதையும் குற்றாலக்குறவஞ்சியின் சாயல் பொருந்திய கதையும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது.

இம் மகிடிக்கூத்துக்கள் திறந்த வெளியில் பகல் வேளைகளில் நடைபெறுகின்றன. முதலிருவகை மகிடிக்கூத்துக்களும் ஏனைய நாடகங்களைப் போன்று ஒத்திகை பார்த்து பழகி திட்டமிட்டு ஆடப்படுவது. அன்று இதற்கெனத் திட்டவட்டமான உரையாடல்கள் இல்லை. கர்ண பரம்பரைக்கதை ஒன்றினை நடிகர்கள் தம் திறமைக்கு ஏற்ப உரையாடி நிகழ்த்தி புதிதளிக்கும் அரங்கு வகையானது. இடல் பாடல், உரையாடல் என்பன இதில் இடம்பெறும்.

## மேடை

வீதியோரங்களில் இதற்கென மேடையிடப்படும். இங்கு மேடை என்பதைப் பார்க்குமிடம் என்ற அர்த்தத்திலேயே கொள்ள வேண்டும். எனெனில் இம்மகிடி மேடைகள் உயரமானவையன்று. சமதள அளவில் அமைந்தவை. வெறும் தரையில் ஐம்பது யார் நீளம் பதினைந்து யார் அகலத்திற்குச் சுற்றிவரக் கம்புகளை பத்தடிக்கொன்றாக நாட்டி அவற்றைக் கயிற்றினால் இணைத்து நாடகம் ஆட ஆக்கப்பட்ட அரங்கே இந்நாடகம் நடைபெறும் மேடையாகும்.

இம்மேடையின் ஒரு பக்கம் கிடுகினால் (பின்னிய தென்னோலை) அடைக்கப்பட்டு அக்கிடுகு வேலியின் மறைவில் இருந்து மேடையில் இருக்கும் மேடைப்பொருள்களை இயக்க அவை மந்திரத்தால் அசைவது போலக் காட்டுவர். இம்மேடையில் மேடைப்பொருள்களாக பூரணகும்பம், கொடிமரம், வட்டாமடை, கொட்டில்கள், பந்தல்கள் என்பன இருக்கும். இம்மகிடிமேடையைச் சூழ நின்று கொண்டோ அல்லது அமர்ந்து கொண்டோ தமது வசதிக்கேற்ப அங்கு நடைபெறும் மகிடி நாடகத்தை பார்வையாளர் பார்த்து மகிழ்வர்.

## நடிகர்– பார்வையாளர் உறவு

முதலாவது மகிடிக்கூத்தில் மட்டக்களப்பாளருக்கு வேடமிடுவர். மேடையினுள் நாடகம் தொடங்கு முன்னர் வந்து தமக்குரிய கொட்டிலினுள் இருப்பர். மலையாளத்தாருக்கு வேடமிடுவோர் அயல் ஊரினின்று வேடமிட்டு வீதியால் ஆடிவந்து மேடைக்குள் இறங்கி, நாடகத்தை ஆரம்பித்து நடத்தி முடிப்பர். இந்த நாடகத்தின் போது பார்வையாளருடன் நடிகர் உரையாடுவர். அங்கு நடைபெறுவதைப் பார்வையாளருக்கு விளக்குவர். இவ்வண்ணம் நடிகர் – பார்வையாளர் இணைப்பில் இந்நாடகம் நடைபெறும்.

இரண்டாவது வகை மகிடிக்கூத்தின் மேடையமைப்பும் பெரும்பாலும் முன்னையதைப் போன்றதே. ஆனால் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. முன்னைய மகிடியில் நடிகர் ஒரு பக்கத்து வழியினால் மேடையினுள் நுழைய இதில் நடிகர் இரண்டு வழிகளினால் உள்நுழைவர். இது முழுக்க முழுக்க ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாகவே அமையும். சாம்பலாண்டி என்றழைக்கப்படுவோரும் அவரது உதவியாளரும் இதிற்பார்வையாளரை அமைதிப்படுத்தி நடைபெறப்போகும் நாடகத்தை விளக்கி இதனை நடத்துவர் இடையிடையே விளக்கமளிப்பார். இவ்வகையில் இவர்கள் நவீன நாடக அரங்கின் எடுத்துரைஞர்களை ஒத்தவர்களாயுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பழைமையும் கட்டுப்பாடும் இணைந்த வடிவு

மூன்றாவது வகை மகிடிக்கூத்தின் மேடையமைப்பு முதலிரு வகைகளை விட வித்தியாசமானது. முதல் இருவகை மகிடிக்கூத்தின் மேடை அமைப்புப்போல இது அமையினும் இம்மேடை இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதியில் மட்டக்களப்பின் தென்மோடி, வடமோடிக் கூத்தாட்டங்களுக்கு அமைக்கப்படும். மேடைபோல ஒரு வட்ட மேடை (வட்டக்களரி) அமைக்கப்படும். இது இலைகளாலும், குருத்துக்களாலும் அலங்கரிக்கப்படும். மற்றப் பகுதி வழக்கமான மகிடி மேடைபோல அமைக்கப்படும். அங்கு கொடிமரமும், கும்பங்களுக்கு மேடைப் பொருள்களாயிருக்கும். பாத்திரங்களின் தோற்றமும் வரவுத்தாளமும் தருவும் பாடலும் கூத்துப்போல வட்டக்களரியில் நடைபெறும். ஆட்டம் முடிய யசம்பாஷணை மூலமாகக் கதையை நிகழ்த்த மற்ற அரங்கிற்கள் பாத்திரங்கள் வந்து விடுவர். எழுத்தில் ஏட்டிலுள்ள கதை வட்ட அரங்கினுள்ளும் ஏட்டில் இல்லாத கர்ண பரம்பரைக் கதை மற்ற அரங்கினுள்ளும் நடைபெறும்.

இவ்வகையில் இது ஒரு கட்டுப்பாடான நாடகம் புராதன நாடகமும் இணைந்த ஒரு நாடக வடிவு எனலாம். இங்கும் வட்டமேடை அல்லாத பகுதியில் நாடகம் நடைபெறும் போது பார்வையாளருடன் குறவன், குறத்தி, வேடன், வேடுவிச்சி ஆகியோர் உரையாடுவர். பார்வையாளர் நாடகத்திற் பங்காடுவர். பார்வையாளர் நாடகத்திற் பங்கேற்றல் இங்கு இடம்பெறும். வட்டமான மேடைக்குள் தோன்றி ஆடும் பாத்திரங்களுக்குத் தாளக்கட்டும் ஆட்டமும் உண்டு. இவை வடமோடித் தாளக்கட்டுக்களாயுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் வடமோடித் தாளக்கட்டுக்கள் இவற்றைவிடச் செம்மையும் முழுமையுமுடையவை.

## பொதுத்தன்மை

இம்மகிடிக்கூத்துக்கள் இடத்துக்கு இடம் வித்தியாசப்பட்டாலும் தமக்குள் ஒற்றுமையுடையனவாகவுள்ளன. இதில் இடம்பெறும் மந்திர தந்திரக்கதைகளும் மேடையமைப்பும் பார்வையாளர்கள் பங்கேற்றலும் குறவன், குறத்தி முதலிய பாத்திரங்களும் இவற்றிற்கு ஒரு பொதுத் தன்மையைத் தருகின்றன. ஆனால் இவற்றினிடையே ஒரு வளர்ச்சிப் போக்கினையும் காணமுடிகின்றது. கர்ண பரம்பரையாக வந்த ஒரு கதையை ஆரம்பத்தில் நிகழ்த்திக் காட்டத் தொடங்கிப் பின்னால் அதற்கென கதையமைப்பினையும் வட்ட மேடையினையும் ஆட்ட முறைகளையும் உள்ளடக்கிய வரலாறாக இதை நோக்கின் இதன் வளர்ச்சியைப் புரிந்து கொள்ளலாம்.

## இடம் பெயர்ந்த ஐதீகம்

இந்நாடகம் மட்டக்களப்பாரை மலையாளத்தார் வென்ற கதைக் கூறுவதால் இதற்கு ஒரு சரித்திரப் பெறுமதியுண்டு. முதலாவது மகிடிக்கூத்தில் வந்து மட்டக்களப்பாரை வெற்றி கொள்ளும் குழுவின் தலைவன் ஒண்டிப்புலி என்பதும், மட்டக்களப்பின் தலை நகர் புளியன்தீவு என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கவை. மட்டக்களப்பு பண்பாட்டுக்கும் மலையாளப் பண்பாட்டுக்கும் நிறைந்த ஒற்றுமையுண்டு. மட்டக்களப்பிற் காணப்படும் பெண் தெய்வ வணக்கமுறை ஆகம முறையில்லாத கிரியைகள், தாய்வழியுரிமை,உறவு முறைகள், பெயர்கள், பழக்க வழக்கங்கள் என்பன மலையாளத்திலும் காணப்படுபவை என்ற கருத்தும் உண்டு. எனவே மட்டக்களப்பில் குடியேறிய புராதன குழு ஒன்றின் கதையே மகிடியாகக் கர்ண பரம்பரையாக நடத்தப்படுகின்றது என்று கொள்ளலும் பொருந்தும். இதனை மானுடவியலாளர் இடம் பெயர்ந்த ஐதீகம் எனவும் அழைப்பர். இவ்வகையில் மகிடிக்கூத்து நாடக நிலையில் மாத்திரமன்றி மானுடவியல் சமூகவியல் நிலையிலும் அணுகும். பெற்றியது.

## ஈழத்தமிழர் புராதன நாடகம்

ஈழத்துத் தமிழரின் புராதனமான நாடக வடிவம் மகிடிக்கூத்து எனலாம். அத்தோடு ஈழத்துத் தமிழரின் வீதி நாடகமும் இதுவே எனலாம். வீதி நாடகத்திற்கென்று சில முக்கிய பண்புகள் உள்ளன. பார்வையாளர் தமது வசதிக்கேற்ப இருந்தோ நின்றோ பார்த்தல், சுற்றிவர் பார்வையாளர்கள் இருத்தல், பார்வையாளர்கள் நாடகத்திற் பங்கேற்றல், நடிகர்கள் பார்வையாளர்களுடன் உரையாடல், வீதியே மேடையாக அமைதல், காட்சிச் சோடனைகள் இன்மை, கற்பனைக்கு அதிக இடம், அதிகளவு ஆடை அலங்காரம் ஒப்பனை இன்மை, பகலில் நடைபெறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பன வீதி நாடகத்தில் சில தன்மைகளாம். இவை மகிடியிற் காணப்படுகின்றன.

புகழ்பெற்ற வங்காள நாட்டுக்காரரான பாதல் சர்க்காரின் நாடகங்கள் வீதி நாடக வகையினவே. அவர் மூன்றாவது அரங்கு என்ற கோட்பாட்டினை நாடக உலகில் ஏற்படுத்தியுள்ளார். எளிமையான வசதி குறைந்த இந்திய கிராமிய பாட்டாளி மக்களுக்கு நாடகத்தின் இலக்கணம் குன்றா வகையில் வீதி நாடகப்பாணியில் நாடகத்தை அளித்தலே அது. மட்டக்களப்பில் மகிடி நாடகத்தின் சாரத்தினின்று நாமும் நமக்கென ஒரு மூன்றாவது அரங்கினை உருவாக்க முடியும்.


மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடி நாடகங்கள் வழக்கில் வந்த பின்னும் அதற்கு அரச அங்கீகாரமும் , படித்தோர் அங்கீகாரமும் கிடைக்கத் தொடங்கிய பின்னர் மகிடி நாடகம் அருகத் தொடங்கியது. இன்று இதனை மிகக் குறைவாகவே ஆடுகின்றனர். இளம் தலைமுறையினர் இதில் ஈடுபடுவது குறைவு. மட்டக்களப்பை வெளியில் அறிமுகப் படுத்தும் தனித்துவம் வாய்ந்த கூத்துக்களையே கைவிடும் இன்றைய இளம் தலைமுறையினர் மகிடி நாடகத்தைக் கைவிடுவதிலும் ஆச்சரியம் இல்லை.

ஆனால் கலாசாரத் தனித்துவமும், தமிழர் தேசிய தனித்துவமும் பேசும் நாம் நமது அருகில் வாழும் சிங்களச் சகோதரர்களை அவதானிக்க வேண்டும். அவர்கள் தமது புராதன நாடகங்களைப் பேணப்பாதுகாக்கின்றார்கள். வளர்க்கின்றார்கள். அதன் மூலம் தமது தனித்துவங்களை பேணுகின்றார்கள். அவர்களின் நாடகங்களான கோலம், சொக்கரி என்பன இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை. எமது மகிடிக்கும் அவர்களது சொக்கரிக்கும் இடையே ஒற்றுமைகளுண்டு. தொலைக்காட்சியிலே இவற்றைச் செம்மைப் படுத்திக் காட்டுகின்றனர். பெருமையோடு அவற்றைத் தமது கலாசாரச் சின்னங்களாகக் காட்டுகின்றனர். தொலைக்காட்சியின் தமிழ்ப்பிரிவினரும் இவ்வகையிற் தமது கவனத்தைத் திருப்புதல் வேண்டும். கொழும்பு வாழ் தமிழ் மக்களின் உயர் கலாசாரத்தையே ஈழத்துத் தமிழ்க் கலாசாரமாக காட்டுவதைக் குறைத்து மண்ணிலிருந்து கிளைக்கும் தமிழ் மக்கள் கலைகளையும் காட்ட முயல வேண்டும்.

இவ்வகையில் மகிடிக்கூத்தும் கவனிப்பிற்குரிய ஒன்றாகும்.

இவ்மகிடி நாடகம் யாழ்ப்பாணத்திலும் பண்டுதொட்ட இருந்தது என அறியமுடிகிறது. இந்நாடகம் மூதூர், வவுனியாப் பகுதிகளிலும் அத்தி பூத்தாற்போல நடைபெறுகின்றது. என்ற தகவல்களும் கிடைத்துள்ளன. இவை ஆராயப்பட வேண்டும். இத்தகவல்கள் பொதுவாக இந்நாடகம் ஈழத்தமிழரின் புராதன நாடகம் என்பதைச் சுட்டி நிற்கின்றன.

மகிடிக்கூத்து பற்றி ஆய்வும் தேடலும் ஈழத்துத் தமிழரின் புராதன நாடகத்தையும் அதன் நாடக முறையும் எமது கலாசாரத்தின் கூறுகளின் சில தனி அம்சங்களையும் காட்டும் இவ்வகையில் அமைந்துள்ளது என ஆய்வாளர்களும் அபிமானிகளும் கூறுகிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நட்பின் சிகரம்

தி.சரவணபவான் (நூலகர்)

தனியாரால் நடத்தப்படும் ஆரம்பப் பாடசாலையது. சின்னச்சின்ன வண்ணத்திப் பூச்சிகளாய் சிறகடித்துப் பறக்கும் மாணவ மாணவிகள் இன்று முழுவதும் பாத்துக்கொண்டே இருக்கலாம் அவ்வளவு கொள்ளையழகு. ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் ஒவ்வொரு பாடலையும் ராகத்தோடு சத்தமாக பாடிக் கொண்டிருந்தார்கள். இப் பாடசாலையில் படிக்கும் குழந்தைகளான தீபன்,சுரேன் இருவரும் நண்பர்கள். இருவரின் வீடும் பக்கம் பக்கம். இவர்களை பாடசாலையிலிருந்து சுரேனின் அப்பாதான் வீட்டுக்கு கூட்டிச்செல்வார். இன்று சுரேனின் அப்பா வெளியூர் சென்றதால் தீபனின் அம்மா கலாவந்து இருவரையும் பாடசாலை விட்டதும் வீட்டுக்கு கூட்டிச்சென்றார். சுரேனுக்கு அம்மா கிடையாது. அவன் சிறுவயதாக இருக்கும் போதே தாய் இறந்துவிட்டார். சுரேனின் அப்பா சுந்தரமூத்தி ஒருதனியார் நிறுவனத்தில் தலைமைப்பொறுப்பில் கடமையாற்றினார். இவர் வேலைநிமித்தம் வெளியூர் செல்லும்போது சுரேனை தீபனின் வீட்டில் விட்டுச்செல்வார்.

சுரேனின் அப்பா சுந்தரமூத்தி இந்த தனியார் நிறுவனத்தில் கடமையை பொறுப்பேற்பதற்காக இவ்வூர் எப்படி ஊரோ.. என்ன ஏது ? என்று பயந்துகொண்டே வந்தார். புதியவீட்டுக்கு இவர்கள் வீட்டுப்பொருட்களுடன் வந்து உதவிக்கு யாருமில்லாமல் தடுமாறுவதைக்கண்ட பக்கத்துவீட்டு தீபனின் அப்பா ராமச்சந்திரன் ஓடிவந்து பொருட்களை இறக்கிவைத்து எல்லாஉதவிகளையும் செய்தார். தீபனின் அம்மா கலாவும் அவர்களுக்கு சாப்பாடு,தேனீர் கொடுத்து உபசரித்தாள். அன்றிலிருந்து இரு சிறுவர்களும் நண்பர்களாகி விட்டார்கள். பாதிநாட்கள் சுரேன் நண்பன் வீட்டில்தான் இருப்பான். கலாவும் தாய்யில்லாப் பிள்ளையென்று அவனில் மிகுந்த பாசமாகவே இருந்தாள் தீபனும் பாசத்துடன் சுரேனுடன் பழகினான்.

இருவரும் ஒன்றாகவே ஆரம்பப் பாடசாலைக்கு செல்வார்கள். சுரேனின் அப்பா வராதநேரங்களில் கலாவே இருவரையும் கூட்டிக்கொண்டு வந்துவிடுவாள். அன்றும் சுரேனின் அப்பா வெளியூர் சென்றதால் கலா நேரத்துடன் வந்துவிட்டாள். பாடசாலைமுடிந்து குழந்தைகள் வெளியே வரத்தொடங்கினார்கள். கலாவைக்கண்டதும் இருவரும் ஓடிவந்து கட்டிக்கொண்டார்கள். சரிபோகலாமா என்றுகலா இருவருக்கும் இரு சாக்கிலேட்டுக்களை கொடுத்தாள். குழந்தைகள் இருவரும் வீடுவந்ததும் மதியஉணவை உண்டுவிட்டு சிறிதுநேரம் தூங்கினார்கள். சரியாக



நான்கு மணியானதும் இருவரையும் தேனீரோடு எழுப்பியதுடன் இருவரும் விரைவாக வெளிக்கிடுங்கள் நாங்கள் ஒருஇடத்துக்கு போகப்போகிறோம் அது உங்களுக்கு மிகவும் பிடித்தமான இடம்தான் என்று கூறி இருவரையும் அழைத்துக்கொண்டு சென்றாள் கலா. அவர்கள் சென்ற இடம் ஒருபெரிய நூலகம். அங்குள்ள சிறுவர் பகுதிக்கு அழைத்துச்சென்று இருவரையும் அங்கத்தவராக சேர்த்துவிட்டாள். நூலகரும் அவர்களை அழைத்துக்சென்று ஒவ்வொரு பகுதியாகக் காட்டினார். தீபனுக்கும்,சுரேனுக்கும் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகிழ்சியாக இருந்தது. கலாசொன்னாள் நீங்க இப்பயிருந்து உயர்தரம் படிக்கும் வரைக்கும் நூலகத்துக்கு வந்து புத்தகங்களைபடியுங்க புத்தகங்களை படிக்கப் படிக்கத்தான் நல்ல அறிவும், பழக்கவழக்கங்களும் வரும் சரியா.. இங்கு கதைப்புத்தகங்கள் மட்டுமல்ல பாடப்புத்தகங்கள், சிறுவர்களுக்கான காட்டூன் படங்களுமிருக்கு இனி நேரம் கிடைக்கும் போது நானோ அப்பாவோ அல்லது சுரேன் அப்பாவோட என்றாலும் நீங்கள் இங்கவரலாம் என்றாள்.

அன்றிலிருந்து இரு நண்பர்களும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் நூலகம் செல்லத்தவறுவதில்லை. நாட்கள் ,மாதங்கள்,வருடங்களாக ஓடியது இப்போது சுரேனும் தீபனும் உயர்தரத்தில் படித்துக்கொண்டிருந்தார்கள். சுரேனின் அப்பாக்கு வேலைவேறு ஊருக்கு மாற்றலாகியது அவர் அங்கே போவதற்கு ஆயத்தம் பண்ணும்போது ராமச்சந்திரனும்,கலாவும் சுரேனின் படிப்புகெட்டுப்போகும் பரீட்சைக்கு இன்னும் ஆறுமாதங்கள் மாத்திரம் இருப்பதால் பரீட்சைமுடியுமட்டும் சுரேன் எங்ககூடவே இருக்கட்டும் அண்ணா.. நான் பத்திரமாக பாத்துக்கொள்கிறேன் நீங்ககவலைப்படாம போங்க உங்களுக்கு லீவு கிடைக்கும்போது வந்துபாருங்கள் என்று கலா சொன்னாள். சுரேனின் அப்பாக்கும் இது சரியென்றுபட்டது இதுவரையில் அவர் தன்மகனைவிட்டுப் பிரிந்ததில்லை என்னசெய்வது தாயில்லாப்பிள்ளை கலாவும் ராமச்சந்திரனும் ,அவனை நன்றாக பாத்துக்கொள்வார்கள் அதுமட்டுமில்ல தீபனும் ஒருநல்ல நண்பன் அதனால் அவர் மகிழ்ச்சியாக சுரேனை அவர்களிடம் விட்டுவிட்டு ஊருக்குகிளம்பினார் சுரேனும் தன் துக்கத்தை வெளிக்காட்டவில்லை அன்போடே வழியனுப்பினான்.

அன்று மாலை கலாவின் அண்ணனுக்கு உடம்பு முடியாமல்போய் வைத்தியசாலையில் சேர்த்திருப்பதாக தகவல் வந்தது அண்ணனைப் பார்க்கப்போக கலாவால் முடியவில்லை. தீபனிடம் தம்பி மாமாவைபோய் பார்த்துவிட்டு வருகிறாயா? என்றாள். தீபனும் சரியெனக்கூறி அப்பாவின் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வைத்தியசாலை நோக்கிச் சென்றான் ஒருமுச்சந்தியை கடக்கும்போது நாய் ஒன்று குறுக்கேபாய்ந்தது. தீபனுக்கு அவ்வளவுதான் தெரியும் அவன் மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கியெறியப்பட்டான் அக்கம் பக்கம் உள்ளவர்கள் ஓடிவந்து தீபனைவைத்தியசாலைக்கு கொண்டுசென்று சேர்த்தார்கள். கலாவுக்கு தகவல் கிடைத்தபோது அவள் பதறிக்கொண்டு சுரேனையும் அழைத்துக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றாள். தீபனின் இடதுபக்கம் முழுவதும் அடிபட்டு பேச்சுமூச்சில்லாமல் கட்டிலில் கிடந்தான் சுரேனுக்கு அழுகையை அடக்க முடியவில்லை அவன் கலாவைதேற்றினான் வைத்தியரிடம் ஓடிப்போய் என்னவென்று விசாரித்தான். அவரும் தம்பி தீபனுக்கு ரெம்பஅடிபட்டிருக்கு எப்படியும் சரியாக ஒருமாதமாகலாம் சிலஎலும்பும் முறிஞ்சிரிச்சி ஆனால் உயிருக்கு ஒன்றும் பயமில்லை யோசிக்கவேண்டாம் என்றார். கலாவிடம் வந்தசுரேன் கலாம்மா நீங்கபயப்படவேண்டாம் அவனுக்கு ஒருபிரச்சனையுமில்லை தீபனின் அப்பாவுக்கும் சொல்லிட்டன் இப்ப இரவாகிவிட்டது ஆட்டோபிடித்து வீட்டுக்குபோங்க நான் இங்கிருந்து அவனைப் பத்திரமாக பாத்துக்கொள்கிறேன் என்று ஆறுதல்படுத்தி கலாவை வீட்டுக்கு அனுப்பிவைத்தான். நாட்கள் உருண்டோடியது இன்னும் தீபனுக்கு காலூன்றி நிற்கமுடியவில்லை. சுரேனின் தோள்களை பிடித்தவண்ணம் தெத்தித் தெத்தித்தான் அவனால் நடக்கமுடிந்தது. பரீட்சை நெருங்கிவருவதால் அவன் படிக்கவேண்டுமென்று நூலகத்திலிருந்து புத்தகங்களை எடுத்துவந்து படிக்க உதவிசெய்தான் சுரேன். தீபனின் மனம் சோர்ந்துபோய் அடேய் சுரேன் என்னால் உனக்கு எவ்வளவு கரச்சல் எனக்கு செத்திரலாம்போல இருக்கிடா.. உடல்வேதனை, மனவேதனைஎல்லாம் சேர்ந்து என்னை சாகடிச்சிடும் எப்படித்தான் நான் பரீட்சைஎழுதுவன் நீயே சொல்லுபார்ப்பம் என்றான். டேய் தீபன் நான் ஒருத்தன் இருக்கும்வரைக்கும் இப்படியான வார்த்தைகளை சொல்லாதேயடா. உன் அம்மாகையில் சாப்பிட்டிருக்கன் அதோடு நீஎன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உயிர்நண்பன் என்னயிருந்தாலும் என் உயிரைக்கொடுதாவது உனக்கு ஒன்றும் நேராமல் பாதுகாப்பேன் இது என் இறந்துபோன அம்மாமீது சத்தியம். நிச்சயம் நீ பரீட்சை எழுதுவாய் அதில் சித்தியும் அடைவாய் உனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நான் செய்வேன் என்று தீபனின் கைகளைப்பிடித்து கண்ணீர் சிந்த கூறினான் சுரேன். பரீட்சைநாட்களும் வந்தது தீபனை ஒருகுழந்தையைப்போல் பரீட்சை நிலயத்திற்கு அழைத்துச்சென்று பரீட்சை எழுதவைத்தான் சுரேன். ஒவ்வொருநாளும் கலா சுரேனுக்கு நன்றிசொல்லுவாள் சுரேனோ இது என்னுடைய கடமைகலாம்மா எனசிரித்துக்கொண்டே சொல்லுவான். இவ்வளவு நாட்களில் சுரேன் முகம் சுளித்ததேயில்லை தீபனின் எல்லா பணிவிடைகளையும் அவன்தான் செய்வான் கலாகூட நினைப்பதுண்டு இப்படியும் ஒருநட்பா பாசமா என்னவென்று சொல்வது ஏழு ஜென்மம் எடுத்தாலும் இவன் செய்த உதவிக்கு கைமாறுசெய்யவே முடியாது சிலகாலம் செல்ல பரீட்சைமுடிவுகளும் வந்தது.

தீபனும்,சுரேனும் மிகவும் திறமையாக சித்தியடைந்தார்கள் இருவரையும் பாடசாலையில் எல்லோரும் பாராட்டினார்கள் அதிபர் இருவரையும் அழைத்து நட்புக்கு எடுத்துக்காட்டாக நீங்கள் இருவரும் இருக்கின்றீர்கள் இனியும் இப்படியே இருங்கள் என்று வாழ்த்தினார். தீபன் சுரேனின் கைகளைப் பிடித்துக்கொண்டு டேய் சுரேன் நீதான் என் நட்பின் சிகரமடா அடுத்த ஜென்மம் ஒன்றிருந்தால் அப்போதும் நீதான் என் நண்பனாக இருக்கவேண்டுமென்று சுரேனை இறுகத் தழுவிக்கொண்டான். அத்துடன் மறக்காமல் தங்கள் படிப்புக்கு உதவியாக இருந்த நூலகத்திற்குச் சென்று அங்கு வேலைசெய்த உத்தியோகத்தர்களுக்கு இனிப்பு வழங்கி நன்றியும் கூறினர். பின்பு இரு நண்பர்களும் சந்தோசமாக எதிர்காலத்தைநோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தேசிய வாசிப்பு மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் சில பதிவுகள்






### நூலக சிரமதானம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தேசிய வாசிப்பு மாத கொடிதினம்









சிறுவர்களுக்கான படக்காட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஊர்வலம்











## புத்தகக் கண்காட்சி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media













Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிப்பு மரம்




சிறுவர் கதை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media